# குழந்தைகளுக்கு சிகிச்சை அளிப்பதற்கென பிரிட்டிஷ் வைத்திய நிபுணர் குழு யாழ். விஜயம்


விலை ரூபா 3-00

# ஈழநாடு

THE EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர்: 32 வைகாசி: 18 துல் ஹஃதா: பிறை: 7 இதழ்: 109

யாழ்ப்பாணம் வெள்ளிக்கிழமை 1-06-1990


(யாழ்ப்பாணம்)
எரிகாயங்களினாலும், வேறு பாரிய காயங்களினாலும் உடம்பின் எப்பாகத்திலும் ஏற பட்டுள்ள தழும்புகள், அவலட்சண காயம், அவயங்கள் இயங்காத தன்மை உடைய குழந்தைகளுக்கு மாற்றுச் சிகிச்சை அளிப்பதற்கான சத்திரசிகிச்சை நிபுணர் குழு வொன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்யவுள்ளது.

பிரிட்டிஷ் பிறைற் ஐ-சரிதி நிறுவனத்திலிருந்து இரு சத்திர சிகிச்சை நிபுணர்கள், இரு தாதியர்கள், நிறுவனத்தின் நிர்மாணப் பணிப்பாளர் ஆகியோர் கொண்ட ஐந்து

(8-ம் பக்கம் பார்க்க)

வடபகுதி

## கடற்பகுதியில் குண்டு வெடிப்புச் சத்தங்கள்!

(காங்கேசன்துறை)
நீண்டகால இடைவெளிக்குப்பின் வடபகுதிக் கடற்பகுதியில் பயங்கர பீரங்கி குண்டு வெடிப்புச் சத்தங்கள் கேட்டதால் கரையோரப் பகுதி மக்கள் பெரிதும் பீதியடைந்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை ஆறு மணியளவில் ஆரம்பித்த இந்த பீரங்கி குண்டுவெடிப்புச் சத்தம் 15 நிமிடங்களுக்கு தொடர்ச்சியாகக் கேட்ட வண்ணம் இருந்தது.

காங்கேசன்துறைக்கு வட

(8-ம் பக்கம் பார்க்க)

★ "மாகாணசபை அமைந்த பிறகே

# வட-கிழக்கு பகுதிகளில் புதிதாக பொலிஸ்நிலையம் திறக்கமுடியும்

அன்ரன் பாலசிங்கம்

(அலுவலக நிருபர் மணிசேகரன்)

காணசபை அமைந்த பிறகே வடக்கு கிழக்கு மாகாணங்களில் புதிதாக பொலிஸ்படை அமைக்கப்படுவதுடன் புதிய பொலிஸ் நிலையங்களையும் அமைக்க முடியும்" என்று கலாநிதி அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

கோண்டாவிலிலுள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணிச் செயலகத்தில் பத்திரிகையாளர் மத்தியில் பேசுகையிலே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது;

"வடக்கு கிழக்கு மாகாணத்தில் ஸ்திரமான அரசாங்கம் அமைந்த பின்னரே பொலிஸ் படை பற்றி தீர்மானிக்க

(8-ம் பக்கம் பார்க்க)

மாகாண சபை கலைப்பு:

## ஜனாதிபதி தக்கதருணத்தில் தீர்மானம் எடுப்பார்!- ரஞ்சன்

(கொழும்பு)
"வடக்கு-கிழக்கு மாகாண சபையை கலைப்பது சம்பந்தமாக ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா தக்க தருணத்தில் தீர்மானம் எடுப்பார்; அவரது தீர்மானத்துக்காக சகலரும் காத்திருப்பது அவசியமானது."

பெருந்தோட்டத்துறை அமைச்சரும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான

(8-ம் பக்கம் பார்க்க)

## புலிகள்-ஜனாதிபதி பேச்சுவார்த்தை இன்றுகொழும்பில் ஆரம்பம்!

(யாழ்ப்பாணம்)
இன்று விடுதலைப் புலிகளின் முக்கியஸ்தர்களுக்கும், இலங்கை அரசாங்கத்துக்குமிடையில் கொழும்பில் பேச்சுவார்த்தைகள் நடைபெறவுள்ளன.

விடுதலைப்புலிகளுடனான இப் பேச்சுவார்த்தையில் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசா, பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் விஜேரத்ன, நீதிஅமைச்சரும் வடகிழக்கு சமாதானக்குழுத் தலைவருமான ஜனப் ஏ. சி. எஸ். ஹமீத் ஆகியோர் கலந்து கொள்வார்கள். மாகாண கலைப்பு, அரசியலமைப்பின் 6வது ஷரத்து நீக்கம் ஆகியவை இந்தப் பேச்சுவார்த்தையில் முக்கியஇடம் பெறவிருக்கின்றன.

(8ம் பக்கம் பார்க்க)

## சொக்கன் மணி விழா நாளை நடக்கிறது

(யாழ்ப்பாணம்)
முதுபெரும் எழுத்தாளர் சொக்கன் மணிவிழா, நாளை சனிக்கிழமை யாழ். நாயன்மார்கட்டு மகேஸ்வரி வித்தியாசாலையில் சொக்கன் மணி விழாச் சபைத் தலைவர் திரு.

(8-ம் பக்கம் பார்க்க)

## மஜர் முரளி நினைவுக்கேடய புதிர்ப்போட்டி

(யாழ்ப்பாணம்)
விடுதலைப்புலிகள் மாணவர் பக்கமும் நிதர்சனம்தொலைக் காட்சி நிறுவனமும் இணைந்து நடாத்தும் மேஜர் முரளி நினைவுக் கேடய புதிர்ப்போட்டி நாளை சனிக்கிழமை காலை 9-00 மணிக்கு நடைபெறும்.

முதலாம் சுற்றுப்போட்டி கோட்ட மட்டத்தில் பாடசாலைகளுக்கிடையே நடைபெறும்.

கோட்டப் பிரிவும் போட்டி

(8-ம் பக்கம் பார்க்க)

## இந்திய வம்சாவழியினர் விவகாரம் இலங்கை-இந்திய அரசுகள் பேசித்தீர்வுகாண வேண்டும்

(கொழும்பு)
"இந்திய வம்சாவழிப் பிரஜைகளை மீண்டும் இந்தியாவுக்கு திருப்பி அனுப்புவதா இல்லையா என்ற பிரச்சனை குறித்து இலங்கை இந்திய அரசாங்கங்கள் பேசித் தீர்வுகாண வேண்டிய விடயம்" என்று பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் ரஞ்சன் விஜயரத்ன தெரிவித்துள்ளார்.

இந்திய வம்சாவழியினர் இலங்கையில் தங்கிவிட தீர்மானித்துள்ளார்கள் என்பது உண்மையானால். அது பற்றி குடியகல்வு, குடிவரவுத் திணைக்களமே முடிவு எடுக்கவேண்டுமென்றும அமைச்சர் தெரிவித்தார்.

(8ம் பக்கம் பார்க்க)

## கடத்தல் பொருள்கள் பிடிபட்டன

(யாழ்ப்பாணம்)
இந்தியாவிலிருந்து இலங்கைக்கு கண்ணாடி நூலிழைப் படகில் சட்டவிரோதமாகக் கடத்திவரப்பட்ட ஒன்பது பொதிகள் அடங்கிய ஜவுளித் துணிகள், இருநூறு கூறைச் சேலைகள், சாரங்கள் ஆகியவை நேற்றுமுன்தினம் இரவு வடபகுதி கடற்பகுதியில் வடபிராந்திய கடற்படைபிரிவினரால் கைப்பற்றப்பட்டன.

இந்தப் படகிலிருந்த ஐந்து பேரும் கடறபடையினரால் கைது செய்யப்பட்டனர்.

நேற்றுக்காலை காங்கேசன்துறை சுங்க இலாகாவின்

(8-ம் பக்கம் பார்க்க)

## "விடுதலைப்புலிகள்-அரசு பேச்சுக்களில் திருப்திகரமான முன்னேற்றம்" -ரஞ்சன்

(கொழும்பு)
"நாட்டில் இரத்தக்களரி மீண்டும் ஏற்படுவதைத் தடுப்பதற்கு அரசாங்கம் தனது சக்திக்குட்பட்ட சகல வழிகளினாலும் முயன்று வருகின்றது. தற்போது நடைபெற்றுவரும் விடுதலைப்புலிகள் அரசு பேச்சுவார்த்தையில் முன்னேற்றம் ஏற்பட்டு வருகிறது".

பாதுகாப்பு ராஜாங்கஅமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான திரு. ரஞ்சன் விஜேரத்ன நேற்று கொழும்பில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் இவ்வாறு தெரிவித்தார்.

(8-ம் பக்கம் பார்க்க)

## ஓய்வூதியம் 5ம் திகதி வழங்கப்படும்

(மானிப்பாய்)
ஜூன் மாதத்திற்குரிய ஓய்வூதிய வவுச்சர்கள் நேற்று யாழ். செயலகத்திற்கு வந்து சேர்ந்துள்ளன.

இம்மாதத்திற்குரிய ஓய்வூதியப் பணம் எதிர்வரும் 5ந் திகதி வழங்கப்படுமென தெரிவிக்கப்படுகின்றது. (71)

## வரி விளம்பரம்

### காணி விற்பனைக்கு

கோண்டாவில் சந்திக்கு அருகாமையில் இருபாலை வீதியில் 15 அடி பாதையுடன் 6½ பரப்பு விவசாயம் செய்ய / வீடுகட்ட உகந்த நல்ல காணி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 58/1 கலட்டி அம்மன் வீதி, யாழ்ப்பாணம்.

(சி–3925)

### குடும்ப நாவல்

மீரா வெளியீடு. பிறந்த நாள் பரிசாக வழங்குவதற்கு நல்லதொரு நாவல் ''பூஜைக்காக வாழும் பூவை'' குடும்பத்தில் தோன்றும் அனைத்துப் புயலுக்கும் அசையாது நிற்கும் ஒருத்தியின் புனித வாழ்வைச் சித்தரிக்கும் கதை. விற்பனையாகின்றது. (சி-3922)

### தவறிவிட்டது

28-05-1990 அன்று பருத்தித்துறையில் இருந்து காங்கேசன்துறை நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றுகொண்டிருந்தபோது த கந்தவனம் கட்டடப்பகுதி கல்விக் கந்தோர் யாழ்ப்பாணம் என விலாசமிடப்பட்ட கந்தோர் பையுடன் டயறியும் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் கீழ்க்காணும் விலாசத்தில் ஒப்படைக்கவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும். த, கந்தவனம் கலைவாணி வீதி, தையிட்டி காங்கேசன்துறை. (சி-3924)

### புலமைப்பரிசில் பரீட்சை - 1990

ஆண்டு 5- புலமைப்பரிசில் மாதிரிப் பரீட்சை ஒவ்வொரு சனிக்கிழமையும் பிற்பகல் 3.00 — 6.00 வரை நடைபெறுகிறது. வெளிமாணவர்களும் தோற்றலாம். விபரங்களுக்கு எலைற் இன்ஸ்ரிரியூட் (வண்ணை தபாலகம் முன்பாக), 99, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம் (சி–3917)

### ஆண்டு-4 பரீட்சை

பலரின் வேண்டுகோளுக்கு இணங்க ஆண்டு 5 புலமைப் பரிசில் பரீட்சைக்கு அடிப்படையாக (4ம் ஆண்டு அரைவாசிப் பாடத்திட்டத்திற்குள்) 10-06-90 ஞாயிறு மு.ப.10-30/பி. ப. 1–00 மணிக்கு நடைபெறும், பதிவு செய்யவும். ஆண்டு 4ற்கு மாதிரி வகுப்புகள் (தமிழ் / கணிதம் / ஆங்கிலம்) நடைபெறுகின்றன. புதிய கல்வி நிலையம், கெங்காதரன் ஆஸ்பத்திரியடி, வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம். (சி–3928)

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

# பாடசாலை வளர்ச்சிக்கு பெற்றோர், நலன்விரும்பிகள் ஆசிரியர் ஒத்துழைப்பு அவசியம்

(யாழ்ப்பாணம்)

மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கும் பாடசாலைகளின் வளர்ச்சிக்கும் ஆசிரியர்கள். பெற்றோர்கள், நலன் விரும்பிகள் ஆகியோர் இணைந்து ஒரு குடும்பம்போலச் செயற்பட வேண்டும். இவ்வாறான செயற்பாடுகள் நடைபெறுமானால் பாடசாலைகள் எமது எதிர்காலச் சந்ததியினரின் பூரண அறிவு வளர்ச்சிக்கு முழுமையான பங்கினை யாற்ற முடியும்.

இவ்வாறு, மேலைப் புலோலி சைவப்பிரகாச மகாவித்தியாலயத்தில் சுமார் 5 லட்சம் ரூபா செலவில் நிர்மாணிக்கப் படவுள்ள மாடிக் கட்டிடத்திற்கான அடிக்கல் நாட்டுவிழாவிற்கு வித்தியாலய அதிபர் ந. சிவபாதசுந்தரம் தலைமை தாங்கிப் பேசும்போது கூறினார்.

கொத்தணி அதிபர் திரு. ஏகாம்பரநாதன் குறிப்பிட்டதாவது; இவ்வித்தியாலயம் பல்வேறுநடவடிக்கைகளில் முன்னணியில் திகழ்வது பாராட்டப்பட வேண்டியதாகும். புலோலிக் கொத்தணிப் பாடசாலைகளின் 5ம் ஆண்டு புலமைப்பரிசிலில் இவ்வித்தியாலய மாணவர்கள் ஏழுபேர் சித்தியடைந்துள்ளனர். எதிர்காலத்திலும் இது போன்ற பல்வேறு துறைகளிலும் இவ் வித்தியாலயம் அபிவிருத்தியடைந்து மாணவ கல்வி உலகிற்கு வழிகாட்டியாகத் திகழ வேண்டும்.

இவ்வித்தியாலயத்திற்கு வகுப்பறைகள் பற்றாக்குறையாக இருப்பதாக ஏற்கனவே சுட்டிக் காட்டப்பட்டிருந்தது. இக்குறைபாடுகளைப் போக்கி, மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் முக்கிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமுகமாகவே இவ்வித்தியாலயத்திற்கான புதிய மாடிக் கட்டிடம் நிர்மாணிக்கப்பட உள்ளது. மேலும் இவ்வித்தியாலயத்தின் தேவைகளைப் பூர்த்திசெய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்

அதிபர் திரு. சிவபாதசுந்தரம் தமது தலைமையுரையில் குறிப்பிட்டதாவது:

''இவ்வித்தியாலய மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கும் வித்தியாலய வளர்ச்சிக்கும் பெற்றோர்கள் ஆற்றிவரும் பணிகள் பாராட்டப்பட வேண்டியனவாகும். இவ்வித்தியாலயச் சுற்றுப்புறப் பாதுகாப்புக்கான சுற்றுமதில் அமைப்பு வேலைகள் பெற்றோர்களின் உதவியினாலேயே பூர்த்தியடைந்தது. மேலும் மாணவர்களின் குடிநீர்ப் பிரச்சனைக்குத் தீர்வுகாணுமுகமாக தண்ணீர்த் தாங்கி ஒன்றை நிர்மாணிப்பதற்கு பெற்றோர்கள் முன்வந்துள்ளது மகிழ்ச்சிக்கு உரியதாகும். இன்று அரசாங்கத்தால் மாடிக் கட்டிடத்தை நிர்மாணிப்பதற்கான நிதியும் வழங்கப்பட்டதை அடுத்தே இன்று அடிக்கல் நாட்டும்விழா நடைபெற்றுள்ளது. தொடர்ந்தும் ஆசிரியர்கள், பெற்றோர்கள் போதியளவு ஒத்துழைப்பு வழங்கி, வித்தியாலய வளர்ச்சியில் பங்குகொள்ளவேண்டும்''

பண்டிதர் திரு மு. பொன்னையாவும் உரையாற்றினார் (52

## வீதிதிருத்தம்

(கொக்குவில்)

கொக்குவில் மத்திய சனசமூக நிலையத்தினர் கொக்குவில் சிவசுப்பிரமணியர் ஆலயத்தில் சிரமதான மூலம் ஆலய வீதிகளை துப்பரவு செய்யும் பணியில் ஈடுபட்டனர்.

(135)

## மேலதிக படை

(ஒட்டுசுட்டான்)

மாங்குளம், வவுனியா ஆகிய இடங்களில் விடுதலைப் புலிகளினால் தடை முகாம்கள் அமைக்கப்பட்டு வீதியால் செல்லும் வாகனங்கள், பயணிகள் சோதனை செய்யப்பட்டு வருகிறது

இதே வேளை கொக்காவில், மாங்குளம் ஸ்ரீ லங்காப்படை முகாம்களுக்கு மேலதிகப் படைகள் வந்துசேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

(1 4)

## தமிழ் தினப் போட்டிகள்

(மன்னார்)

பேசாலைக் கொத்தணி பாடசாலைகளின் தமிழ்த் தினப் போட்டிகள் அண்மையில் பேசாலைப் புனித பத்திமா மகாவித்தியாலயத்தின் கொத்தணி அதிபர் எஸ். ஆர். சிறில் தலைமையில் இடம்பெற்றது.

இப்போட்டியில் தலைமன்னார் புனிதசென்ரேலன்ஸ் வித்தியாலயம் பல முதலிடங்களைப் பெற்றுக்கொண்டன.

மீனவர் நடனம், கட்டுரைப் போட்டியிலும் பேசாலை மகாவித்தியாலயம் நாடகப் போட்டியில் முதலிடத்தையும் தலைமன்னார் 'பியர் பாடசாலை பரதநாட்டியத்தில் முதலிடத்தையும் இன்சம் சிறுதோப்பு துன்னுகுடியிருப்பு, கட்டுக்காரன்குடியிருப்பு போன்ற பாடசாலைகளும் இதில் பரிசுகள் பெற்றன,

9 பாடசாலைகள் பங்கெடுத்த இப்போட்டிக்கு எருக்கலம்பிட்டி மத்திய மகா வித்தியாலயத்தைச் சேர்ந்த ஆசிரியர்கள், இளைப்பாறிய பேசாலை பாடசாலை அதிபர் சி. அந்தோனிதுரம் நடுவராகக் கடமையாற்றினர்.

(85)

## நாவற்குழி ம. வி. கல்விக் கண்காட்சி

(நாவற்குழி)

நாவற்குழி மகாவித்தியாலயத்தின் கல்விக் கண்காட்சி இம்மாதம் 8ம் திகதி நடைபெறவுள்ளது.

இக்கண்காட்சியை பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளும் தென்மராட்சிக் கல்விக் கோட்ட உதவிக்கல்விப்பணிப்பாளர் திறந்துவைப்பார்.

(107)

## அரிசி மா வரி நீக்கம்

(ஒட்டுசுட்டான்)

கூட்டுறவு மொத்த ஸ்தாபனத்தால் அரிசி, மா, என்பவற்றை ப. நோ. கூ. சங்கங்கள் கொள்வனவு செய்யும் போது அறவிடப்பட்டு வந்த ஒரு சதவீத வரியை அரசு நிறுத்தியுள்ளதாக முல்லைசெயலக உதவி உணவுக் கட்டுப்பாட்டு அதிகாரி செல்வி எஸ். விஜயலட்சுமி சகல கூட்டுறவுச் சங்கங்களுக்கும் அறுவித்துள்ளார். (144)

## பொது அறிவுப் போட்டி

(அச்சுவேலி)

மருதனமடம் கோட்டக் கல்வி அலுவலக பிரிவுப் பாடசாலைகள் இடையே நடைபெறும் பொது அறிவுப் போட்டி சுன்னாகம் இராமநாதன் கல்லூரியில் நாளை 2ம் திகதி சனிக்கிழமை காலை நடைபெறும்.

பாடசாலை மாணவர்கள் இடையான பொது அறிவுப் போட்டியை தமிழீழ விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பும் நிதர்சனம் தொலைக்காட்சி அமைப்பும் இணைந்து ஏற்பாடு செய்து நடத்துகின்றது.

கோட்டக்கல்வி அலுவலகப் பிரிவுவாரியாக பொது அறிவுப் போட்டிகள் நடைபெற ஏற்பாடாகியுள்ளது.

(74)

## வீதியின் பெயர் மாற்றல் பற்றிய அறிவித்தல்

வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேசசபை நெல்லியடி உப அலுவலக எல்லைக்குட்பட்ட 2-ம் வட்டாரத்திலுள்ள கரவெட்டி வடக்கு ''எல்லை வீதி'' யின் பெயரை மாற்றி ''திருமகள் சோதி வீதி'' எனப் பெயரிடும்படி நெல்லியடிசனசமூக நிலையமும், தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய தர்மகர்த்தா சபையும் எனக்கு விண்ணப்பித்துள்ளார்கள். இவ்வீதியின்பெயர் மாற்றம் தொடர்பான ஆட்சேபனைகளை இவ் விளம்பரத் திகதியிலிருந்து பதின்நான்கு (14) நாட்களுக்குள் பதிவுத் தபால் மூலம் எனக்குத் தெரிவிக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

இ. ஐயாத்துரை
விசேட ஆணையாளர்,
வடமராட்சி தெற்கு மேற்கு பிரதேச சபை,
நெல்லியடி – கரவெட்டி.

கரவெட்டி,
29-05-90.

(ஏ 781)

## சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம்.

சென்ற ஏப்ரல் மாதம் 29ம் திகதி ஈழநாடு, முரசொலி ஆகிய செய்தித்தாள்களில் பிரசுரிக்கப்பட்ட கட்டிடவேலைகள் சம்பந்தமாக திரும்பவும் கேள்விப் பத்திரங்கள் கோரப்படுகின்றன. மேற்குறிப்பிட்ட அறிவித்தலின்படி, முன்னதாக கேள்விப்பத்திரங்கள் சமர்ப்பித்தவர்கள் திரும்பவும் புதிதாக கேள்விப்பத்திரங்களை சமர்ப்பிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

ஏற்கனவே கேள்விப்பத்திரத்திற்கான வைப்புப் பணம் செலுத்தியவர்கள் திரும்பவும் வைப்புப்பணம் செலுத்தத் தேவையில்லை.

1990ம் ஆண்டு யூன் மாதம் 11ம் திகதி காலை 10-00 மணி வரை சுகாதார சேவைகள் பிராந்தியப் பணிப்பாளர் அவர்களால் கீழே குறிப்பிட்ட கட்டிட வேலைக்கு ரூபா 250,000/-க்கு மேற்பட்ட தொகைக்கு பதிவு செய்யப்பட்ட ஒப்பந்தக்காரரிடமிருந்து சீல் வைத்த கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும். அன்றைய தினமே 10-30 மணியளவில் கேள்விப்பத்திரங்கள் திறக்கப்படும். அத்தருணம் ஒப்பந்தக்காரரோ அல்லது அவரது பிரதிநிதிகளோ சமுகம் அளிக்கலாம்.

இவ்வேலை செய்ய விரும்புவோர் எவரும் அரச கரும வேலை ஒப்பந்தக்காரராகவோ அல்லது உள்ளூராட்சி ஆணையாளரினால் அல்லது கூட்டுறவு உதவியாளரினால் அங்கீகரிக்கப்பட்டவராக இருத்தல் வேண்டும்.

இக்கட்டிட வேலைசெய்ய விரும்புவோர் 1990ம் ஆண்டு யூன் மாதம் 8ம் திகதி காலை 10–30 மணி வரை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளரின் பணிமனையில் கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம். திரும்பப் பெறக்கூடிய வைப்புப் பணமாக ரூபா 350/–ம், திரும்பப் பெறமுடியாத பணமாக ரூபா 50/–ம் காசுக் கட்டளை மூலம் செலுத்தி கேள்விப்பத்திரங்களை பெற்றுக்கொள்ளலாம்.

### கிராமோதய சுகாதார நிலையம்

| | | |
|---|---|---|
| யாழ்ப்பாண மாவட்டம் | — | மந்துவில்<br>செந்தாங்குளம்<br>மயிலிட்டி |
| கிளிநொச்சி மாவட்டம் | — | ஆனைவிழுந்தான்<br>புதுமுறிப்பு<br>இராமநாதபுரம்<br>கிளாலி |

கேள்விகள் இணைப் பிரதிகளில் தயாரிக்கப்பட்டபின் கடித உறையில் அடைக்கப்பட்டு மெழுகு சீல் வைப்பதுடன் கடித உறையின் இடதுபக்க மூலையில் ''சுகாதாரப் பகுதியின் கட்டிட வேலை'' என்று குறிப்பிட்டு மேற்கூறிய திகதிக்கு முன் இப்பணிமனையில் கிடைக்கத்தக்கதாக அனுப்பவேண்டும். அல்லது இப்பணிமனையில் வைக்கப்பட்டிருக்கும் பெட்டியில் போடப்படவேண்டும். தெரிவுசெய்யப்பட்ட கேள்விதாரர்கள் அவர்களுடைய கேள்விகள் ஏற்கப்பட்டதென்று அறிவித்தல் கிடைத்தவுடன் ஒரு வார காலத்திற்குள் நியமிக்கப்பட்ட வைப்புப் பணத்தை செலுத்துவதுடன் இதற்கான ஒப்பந்தத்திற்கும் உடன்படல்வேண்டும். அவ்வாறு செய்யத் தவறின் அவரது கேள்வி இரத்துச் செய்யப்படலாம்.

தெரிவுசெய்யப்பட்ட கேள்விதாரர்கள், ஏற்றுக் கொள்ளப்பட்ட கேள்வித் தொகையின் 5% ஒப்பந்தத்தின்படி வேலையை திருப்திகரமாகச் செய்துமுடிக்க பிணைப்பணமாக யாழ்ப்பாண பிராந்திய சுகாதாரப் பணிப்பாளர் நியமிக்கும் வங்கியில் கட்டவேண்டும். வேலை திருப்திகரமாக முடிந்த பின் இப்பணம் திருப்பிக் கொடுக்கப்படும்.

கேள்வி விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுதல், எதையாவது நிராகரித்தல் அல்லது முற்றாக நிராகரித்தல் ஆகிய உரிமைக்கும், அனைத்து தீர்மானங்கள், இறுதி முடிவுகள் யாவும் கேள்விச் சபைத் தலைவரைச் சார்ந்தது.

ந. கனகசபை,
சுகாதார சேவைகள் பிராந்திய பணிப்பாளர்,
யாழ்ப்பாணம்.

30 மே, 90.

(ஏ 770)

# முதல்வர் கருணாநிதிக்கு 'முத்தமிழ் அறிஞர்' பட்டம்

## துணை ஜனாதிபதி சூட்டினார்

(திருச்சி)

தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதிக்கு தஞ்சைபல்கலைக் கழகத்தில் அண்மையில் நடைபெற்ற மாமன்னர் ராஜராஜன் படைப்பு இலக்கிய பரிசு வழங்கும் விழாவில் 'ராஜராஜன்' விருதும் பரிசும் ஒரு லட்சம் ரூபாவும் வழங்கப்பட்டது.

இவ்விழாவுக்கு தமிழக ஆளுநர் பர்னலா தலைமை வகித்தார். துணை ஜனாதிபதி சங்கர்தயாள் சர்மா, கலைஞர் எழுதிய 'தென்பாண்டிச் சிங்கம்' எனும் நூலுக்காக 'ராஜராஜன்' விருதுவழங்கினார்.

துணை ஜனாதிபதி முதலமைச்சர்கருணாநிதிக்கு பொன்னாடை போர்த்தி, மாலை அணிவித்து ஒரு லட்சத்து ஒரு ரூபா காசோலை வழங்கி, 'முத்தமிழ் அறிஞர்' பட்டத்தையும் சூட்டி கௌரவித்தார்.

துணை ஜனாதிபதி சங்கர் தயாள் சர்மா தமதுரையில் கூறியதாவது;

பாசம்பொழியும் உள்ளமும் விருந்தோம்பும் பழக்கமும் கொண்ட தமிழ் மக்கள் மத்தியில் பேசுவதில் மிக்க மகிழ்ச்சி அடைகிறேன் தஞ்சை நகரில் நடக்கிறன். இந்த அருமையான நிகழ்ச்சியில் கலந்து கொள்ளும் வாய்ப்பை எனக்கு நல்கிய தமிழக கல்வி அமைச்சருக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

20-ம் நூற்றுண்டில் மகத்தான மனிதராக விளங்கிய காமராஜர் 'பேரறிஞர் அண்ணாவை' இந்தியாவுக்கு தந்த பெருமை இந்த மாநிலத்துக்கு உண்டு.

சாதாரண குடும்பத்தில் பிறந்து சாதனை படைதத அவர்கள் மறையும்போது வெறும் புகழ் மட்டும்தான் சேர்த்துவிட்டுமறைந்தார்கள். பொருள் சேர்க்கவில்லை.

### அண்ணா வழியில்

இந்தமாநிலத்தின் முதல்வர் கலைஞர் அவர்களின் அரசியல் தத்துவ மேதை அண்ணா ஒழுக்க நெறியை வலியுறுத்தினார். கடமை, கண்ணியம், கட்டுப்பாடு என்ற தாரக மந்திரத்தை வழங்கிய அண்ணாவின் வழியில் முதல்வர் கருணாநிதி பின் தொடர்ந்து செல்கிறார்.

நமது நாட்டில் மகாமனிதர்களாக விளங்கிய விவேகானந்தர், சுவாமி தயானந்தா போன்றோர் கண்ட கனவுகளை லட்சியமாகக்கருதி நிறைவேற்றிய பெருமை அண்ணாவையே சாரும்.

### பெண்கொடுமை குறைவு

பெண்கள் விடுதலை பேச்சளவில் இருந்ததை செயல்படுத்தி காட்டியதுதமிழ்நாட்டில்தான் இந்தியாவிலேயே தமிழ்நாட்டில் பெண் கொடுமைகள் மிக குறைந்த அளவில் உள்ளது. இதற்கு என்ன காரணம் என்பதை அறிய ஒரு ஆராய்ச்சி நடத்துவது பொருத்தமானதாக இருக்கும்.

இந்த உலகத்தில் இரண்டே இரண்டுஜாதிகள்தான்உண்டு. கொடுப்பாரும், கொள்வாரும் தான் என்று பழைய தமிழ்

### கொடுப்பார் கொள்வார்

காமராஜருக்கும், அண்ணாவும் கொடுப்பாரும், கொள்வாருமாகத் தான் இருந்தார்கள். நோபல் பரிசு பெற்ற சர். சி. வி. ராமனும், கணித மேதை ராமானுஜமும், தமிழ் நாட்டைச் சேர்ந்தவர்கள் தான்.

இந்திய குடியரசு தலைவரை தஞ்சை பகுதிதான் தந்து உள்ளது. இதே தஞ்சைபகுதிதான் டாக்டர் கலைஞரையும் தமிழுத்திற்கு ஏன் இந்தியாவுக்கே தந்து உள்ளது.

### தமிழின் பெருமை

உலகத்திலேயே எந்த மொழிக்கும்இல்லாதபெருமை தமிழ் மொழிக்கு உண்டு. பழமை வாய்ந்த மூத்தமொழி சகிப்பு தன்மை வாய்ந்த மொழி தமிழ்.

தமிழ் இலக்கியத்துக்கு குறிப்பாக சங்க இலக்கியத்துக்கு கிறிஸ்தவ மத பெரியவர்களே பாடுபட்டு இருக்கிறார்கள். தொண்டாற்றி இருக்கிறார்கள்.



### திருக்குறள் சிறந்த நூல்

இதுவரை படைக்கப்பட்ட நூல்களிலே திருக்குறள் சிறந்த நூலாகா திகழ்கிறது. தமிழ்மொழி. இலக்கியம், கலாசாரம் பரப்பும் மிகப் பெரிய சக்தி ஆகும்.

பழமையான இந்தியாவில் தோன்றியஅறிவுக்கலைகள் பதினெட்டில் முதன்மையான ஆயுர்வேத மருத்துவ முறை பயன்படுத்தியவர்கள் தமிழர்கள் தான். இதற்கான ஆதாரங்கள் ஏடுகளில் உள்ளது. இயல், இசை, நாடகம் என்னும் மூன்று பரிமாணமாக முத்தமிழாக திகழ்வது தமிழ் மொழி வளர்ச்சியை காட்டுகிறது.

### கலைஞர் சிறந்த அறிவாளி

தமிழகத்தின் முதல்வர் கலைஞர் சிறந்த அறிவாளி. பேச்சாற்றல் எழுத்தாற்றல் மிக்கவர். அவர் தனது எழுத்து. பேச்சு. திரைக்கதை வசனத்தின் மூலம் வரலாற்றில் புதிய காவியம் படைத்திருக்கிறார்.

கலைஞரின் ஆற்றல் திறமை மூலம் வருங்கால சந்ததியினர் நிலையாக பயன்பெற முடியும். கலைஞர் எழுதியுள்ள தென்பாண்டி சிங்கமும், தமிழ் நாட்டின் தென்பகுதியில் வாழும் தமிழர்கள் போதித்த வீரம், காதல், கடமையை விளக்குவதாக உள்ளது. அவர் எழுதிய ''பொன்னர் சங்கர்'' கதை சேலம், தர்மபுரி பகுதி மக்களின் வீரத்தை விளக்குகிறது.

### முத்தமிழ் அறிஞர் பட்டம்

உரைநடை, கவிதை, நுண்கலைகள், நாடகம் எழுதுவதில் வல்லவரான கலைஞருக்கு முத்தமிழ் அறிஞர் என பட்டம் சூட்டி மகிழ்கிறேன். (அப்போது பல்கலைக்கழகம் வளாகத்தில் கூடி இருந்த மக்கள் முத்தமிழ் அறிஞர் கலைஞர் வாழ்க என விண்ணதிர கோஷம் போட்டனர்)

மிகச் சிறந்த வீரனும் அரசனுமான ராஜராஜன் விருதை கலைஞருக்கு வழங்கி இருப்பது பொருத்தமானதே.

### மிகப் பொருத்தம்

10 ம் நூற்றுண்டுக்குப் பின் தஞ்சையை ஆண்ட சோழ மன்னன் ராஜராஜன் இந்தியாவிலேயே தலை சிறந்த பிரகதீசுவரர் ஆலயத்தை நுணுக்கமான கலைகளுடன் கட்டினான்.

கங்கைவரை படைநடத்திச் சென்று கனக விசயர்களை வெற்றிவாகை சூடியவன். அப்படிப்பட்ட மாவீரனின் பெயரில் கலைஞருக்கு விருது வழங்கி இருப்பது மிகப் பொருத்தமானதாகும்.

### வெற்றிபெற வாழ்த்துகிறேன்

கலைஞரின் இலக்கிய ஆற்றல் பெருமை கண்டு உள் நெகிழ்ந்துபோய் இருக்கிறேன் இந்த விருதின் மூலம் சோழனின் சிறப்பை பெற்றுள்ள கலைஞர் அளவற்ற ஆனந்தம் பெற மேலும் மேலும் வெற்றி பெற வாழ்த்துகிறேன்.

தஞ்சை தமிழ் பல்கலைக் கழகததிற்கு தனிப்பட்ட முறையில் ராஜஸ்தானில் இருந்து கொண்டுவரப்பட்ட அழகிய பெண் ஓவியத்தை இந்த விழாவில் வழங்குகிறேன். இந்த அற்புத ஓவியம் வடக்கு, தெற்கு, மேற்கு கிழக்குஆகிய நான்குதிசைகளையும் ஒன்றுபடுத்தும், ஒருமைப்படுத்தும் கருவியாக திகழும் என வாழ்த்துகிறேன்.

### பேனு பரிசு

கலைஞர் மீது நான் கொண்டுள்ள பாசம் அன்பை வெளிப்படுத்த இந்த எழுதுகோலை அவருக்கு வழங்குகிறேன். இந்த எழுதுகோல் அவரது தமிழ்பணியின் மூலம் உலகம் பயன்பெறும்.

# "நாடகக்கலை நன்கு வளரவேண்டும்"

(யாழ்ப்பாணம்)

''கலை வாழ்க்கையைச் செம்மைப்படுதும் ஒப்பற்ற சாதனம். நாடகக்கலை சமுதாய முன்னேற்றத்திற்கு இன்றியமையாத ஒன்று. நாடக ஆசிரியன் வாழ்க்கையில் ஒரு குறிக்கோள் இல்லாதவனுக இருப்பின் நாடகம் அவனது பயனற்றதாகும்.''

இவ்வாறு வேலணை தெற்கு ஐயனார் சனசமூக நிலையக் கலாமன்றம் நடத்திய நாடக விழாவில் பேசுகையில் ஆசிரியர் திரு. செ. சண்முகவடிவு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்து பேசும் பொழுது கூறியதாவது; ''குறிக்கோள் இல்லாத நாடகத்தினுல் நாடகாகிரியனின் காலமும், எமது காலமும் வீணுகிப் போய்விடும். நாடகம் ஏனைய கலைகளைவிட எளிதில் மக்கள் வாழ்க்கையைப் பாதிக்கும். ஆதலால் நாடகத்தை எழுதுபவர்களும் தயாரிப்பவர்களும் மிகவும் அவதானம் செலுத்த வேண்டியது அவசியம். முத்தமிழ் வளர்த்த தமிழர் நாட்டில் நாடகக் கலை நன்கு வளர வேண்டும்'' என்று கூறினார்.

இந் நாடக விழா திரு. சி. கார்த்திகேசு தலைமையில் நடைபெற்றது. திருவாளர்கள் விக்டர் செல்வம், செ. விக்கினேஸ்வரன், இ. சிவநாதன், க. சோதிதாசன், கா. இராசரத்தினம் ஆகியோரும் சிறப்புரையாற்றினர்.

(54)

உடையில்

## தீப்பிடித்து யுவதி படுகாயம்

(யாழ்ப்பாணம்)

மண்ணெண்ணை ஊற்றி அடுப்புப்பற்ற வைத்த இளம் பெண் ஒருவர், உடையில் தீப் பற்றியதால் உடல் முழுவதும் தீக்காயங்களுக்குள்ளானர்.

சண்டிலிப்பாய் வடக்கில் நேற்றுமுன்தினம்இடம்பெற்ற இச்சம்பவத்தில் தனலஷ்மி கண்ணப்பர் (வயது 20)என்ற இளம்பெண்ணே தீக்காயங்களுக்குஉள்ளானவராவார்.

(56)

# "அரசியல்நெருக்கடியைதீர்க்க என் எழுத்து உதவுகிறது"

## கலைஞர் தனது வாழ்க்கையை கூறுகிறார்

(திருச்சி)

தமிழக முதலமைச்சர் மு. கருணாநிதி தமதுரையில் குறிப்பிட்டதாவது:-

தஞ்சை மாநகரில் இந்த் தரணியை ஆண்ட மாமன்னர் பெயரிலுள்ள விருதைத் தமிழ்ப் பல்கலைக்கழகம் சார்பில் அளிக்கிற பெருமைமிகு விழா இங்கு நடந்துகொண்டிருக்கிறது. இதன்மூலம் உங்களையெலலாம் சந்தித்த வாய்ப்புக் கிடைத்ததற்குப் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

### மறக்கமுடியாது

அரசியலில் தொடர்ந்துநேர்மையைக் கடைப்பிடித்துவருபவரும், துணிவு மிக்கவருமான இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் உங்கள் முன்னிலையில் எனக்கு அளிக்கப்பட்ட விருது விழா எனது வாழ்நாளில் மறக்கமுடியாத நிகழ்ச்சிக்ளில் ஒன்றுகும். அவர் எல்லாத் துறையிலும் பெருமைபெற்று விளங்குபவர்.

இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர், கவர்னர், பேராசிரி, துணைவேந்தர் ஆகியோர் என்னை நிரம்பப் பாராட்டிப் பேசினார்கள். அவை அடக்கத்துக்காகக் கூறுவதாகக் கருத வேண்டாம். எனக்கு இருப்பதாக அவர்கள் கூறிய தகுதிகள் அனைத்தும் அடைய முயற்சிக்கிறேன். முற்றுக அடைந்து விடவில்லை.

முன்பு ஆந்திரா மாநிலத்தில் ஜனநாயகத்தை அழிக்காது காத்த பெருமை அவருக்கு உண்டு. ஜனநாயகத்துக்குக் கடுகளவு ஆபத்தென்றாலும் கண்ணீர் சிந்துபவர்தான் இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர். அவர் இருக்கும்போது ஜனநாயகத்துக்கு யாரும் தீங்கு விளைவிக்க முடியாது.

என்னைப் பாராட்டித் தமிழகத்தில் வரலாற்று வீரர்கள், வித்தகர்கள், மேதைகள், விஞ்ஞானிகள், அறிஞர்கள் ஆகியவர்களை அவர் பேசியது புத்தக வடிவில் வரவேண்டியது. அவரது பேச்சு புத்தக வடிவில் வந்தால் இந்தியா முழுவதும் பயன்படும்.

பேரறிஞர் அண்ணா இந்திய வரலாற்றைக் கங்கைக் கரையிலிருந்து எழுதிப் பயனில்லை; காவிரிக் கரையிலிருந்து தொடரவேண்டுமெனக் குறிப்பிட்டார். அது இன்றைய தினம் தொடங்கியிருக்கிறது.

### பேனு பரிசு

இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் காவிரிக் கரையிலிருந்து தொடங்கியிருக்கிறார். அவர் எனக்கு ஒரு பேனவை-எழுதுகோலைப் பரிசாக வழங்கினார். எவ்வளவோ அன்பர்கள் எத்தனையோ பேனுக்களை எனக்கு அளித்திருக்கிறார்கள். பிறந்த நாளில், வேறு பல நாளில் பலவிதப் பேனுக்கள் என்க்கு வழங்கப்பட்டதுண்டு.

### பத்திரமாக வைத்திருப்பேன்

தங்கக் கவசப் பேனு கூட எனக்கு வழங்கப்பட்டுள்ளது. இந்தியக் குடியரசுத் துணைத் தலைவர் வழங்கிய பேனவை, அண்ணா எனக்கு அணிவித்த கணையாழியைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்துகொண்டிருப்பதைப்போல இந்தப் பேனவையும் பார்த்து மகிழ்வேன். பத்திரமாக வைத்திருப்பேன்.

### அன்புக் கட்டளை

பேனவை வழங்கிய அவர் தொடர்ந்து எழுதவேண்டும் என அன்புக் கட்டளை இட்டார். அவருக்கு ஒன்று சொல்லிக்கொள்வேன். என்னுல் எழுதாமல் இருக்கமுடியாது. களைப்புக்கு டானிக் சாப்பிடுவதுபோல எழுதுவது என் அன்றாட வாடிக்கை. இன்று நேற்று அல்ல; 50 ஆண்டாகத் தொடர்ந்து எழுதுகிறேன். இந்தப் பணியை நான் நிறுத்தப் போவதில்லை.

### கதை எழுத உதவியவர்

ஆயிரம் அரசியல் நெருக்கடிகளுக்கிடையே எப்படி எழுதுகிறேன் எனக் கவர்னர் கேட்டார். எழுதுவதால் அரசியல் நெருக்கடி நிலையைச் சமாளிக்கிறேன். இந்த விருது பெறும்போது எஸ். எஸ். தென்னரசுவை நான் குறிப்பிடாமல் இருக்கமுடியாது. அப்படிச் செய்யாவிட்டால் நான் நன்றி கொன்ற குற்றத்திற்கு ஆளாவேன். இந்தக் கதையை எழுதப் பெரிதும் உதவியவர் அவர்.

### தென்பாண்டி சிங்கம்

முக்குலத்தோர்களுக்காகத் தென்பாண்டிச் சிங்கமும், கொங்கு வேட்டுவக் கவுண்டர்களுக்காகப் பொன்னர் சங்கரும், வன்னியர்களுக்காகப் பாயும் புலி பண்டார வன்னியரும், எழுதியிருக்கிறேன்.

### கடைசி மூச்சு

என் உடலில் கடைசி மூச்சு உள்ளவரை உழைப்பேன்; உழைப்பேன்; உழைத்துக் கொண்டே இருப்பேன். கவர்னர் பதவி ஏற்றவுடன் கலந்துகொள்ளும் முதல் நிகழ்ச்சி இது. எனவே இது நமக்குப் பெருமை சேர்க்கும் நிகழ்ச்சியாகும்.

### அஞ்சுகம் அறக்கட்டளை

இங்கே எனக்கு 1 லட்சத்து ஒரு ரூபாய்க்கான காசோலை அளிக்கப்பட்டது. அதை நான் திரும்ப அளிக்கிறேன் எனக் கூறவில்லை. நன்கொடையாக வழங்குகிறேன். திரும்ப அளிக்கிறேன் எனக் கூறக்கூடாது. அப்படிச் சொன்னுல் வழங்கியவர்களுக்கு வருத்தம் ஏற்படும். இந்த ஒரு லட்சத்து 1 ரூபாயைக் கொண்டு அஞ்சுகம் முத்துவேலர் அறக்கட்டளை தொடங்கப்படவேண்டும். அதிலிருந்து வரும் வட்டியைக் கொண்டு சிறந்த படைப்பாளிகளுக்குப் பரிசு வழங்கவேண்டும்.

### ஆய்வுரை

டாக்டர் கால்டுவெல், ந. மு. வெங்கடசாமி நாட்டார், திரு

(5-ம் பக்கம் பார்க்க)

**மணிவாக்கு**

''நல்ல வார்த்தைகளுடன் கூடிய கல்வி ஒன்றே மனிதனுக்கு அழகு தருவது. அது அரசாளவைப்பது''.
— பர்த்ருஹரி நீதி.

# நமது நோக்கு

## நூலகம் மீண்டும் மலர்ச்சிபெற...!

எமது பகுதி மக்களின் முதுபெரும் சொத்துக்களில் ஒன்ருகத் திகழ்ந்திருந்தது யாழ். பொது நூல்நிலையம்.

1931ல்- சர்வசன வாக்குரிமை கிடைத்தவேளையில், இலவசப் பொதுநூல்நிலையம் ஒன்றின் அவசியத்தை வலியுறுத்தியவர் கே. எம். செல்லப்பா.

1935ல் நகரசபை நூல்நிலையம் ஆரம்பிக்கப்பட்டது. முதலாவது மேயர் சாம் சபாபதி, லோங் அடிகளார் போன்ற பலரது முயற்சியால் மாபெரும் அறிவுக் கோயிலாக உருவெடுத்தது.

திராவிடப் பாணியற் கட்டிடத்தை வடிவமைத்தவர் புகழ்பெற்ற தென்னிந்தியக் கட்டடக் கலைஞர் நரசிம்மன்.

97,000 நூல்களுக்கு மேற் சேர்த்துவைக்கப்பட்ட கலைப் பெட்டகமாகவே நூல்நிலையம் திகழ்ந்துவந்தது.

ஆறுமுகநாவலர், கலாயோகி ஆனந்தாக் குமாரசாமி ஆகியோரது படைப்புகள் அங்கிருந்தன.

இதைவிட, உலகில் வேறெங்கும் பெறமுடியாத கையெழுத்துப் பிரதிகளும் அங்கு பேணப்பட்டன.

காட்சிக்கூடம், நூல் இரவல் வழங்கும் பகுதி, சிறுவர் பகுதி, கேட்போர் கூடம், உடனுதவும் பகுதி, நூற் களஞ்சியப் பகுதி, படிப்போர் கூடம் - இப்படிப் பல பகுதிகளாக அமைத்து பல தரப்பட்ட அறிவுப் பசியோடு வருபவர்களுக்கெல்லாம் அருவிருந்து படைத்து வந்தது.

ஆனுல், 1-6-1981ல் அது எரித்து சாம்பராக்கப் பட்டது.

அரசியற் குரோதங்களை அறிவுக் களஞ்சியத்திலா காட்டுவது என ஏங்கியிருக்கிருர்கள் மக்கள்.

இது பண்பாட்டுக் கொலை எனப் பரிதவித்திருக்கிருர்கள் அவர்கள்.

உலகத்தின் கண்டனக் கணைகளிலிருந்து தப்புவதற்காக நட்டஈடு வழங்குவதாக முன்னுள் ஜனுதிபதி வாக்களித்தார்.

இன்று பொது நூல்நிலையம் ஐந்து இடங்களிக்குப் பரவலாக்கப்பட்டிருக்கின்றது. காலச்சூழ்நிலை காரணமாக.

முன்னைய நிலைக்கு நூல்நிலையம் மீண்டும் கட்டியெழுப்பப்படவேண்டும். இதற்கேற்ற சூழ்நிலை உருவாகவேண்டும் என்பதே மக்கள் விருப்பம்.

இதேவேளை, ்வறு சில பாடசாலைகளினதும், பொதுநிறுவனங்களினதும் நூல்நிலையங்களும் சேதமுற்ற செய்திகள் வரலாறு ஆகிவிட்டன.

கல்வி வளர்ச்சிக்குத் தற்போதுள்ள நூல்நிலைய வசதிகள் போதா.

இந்த நிலையில், அமெரிக்கத் தகவல் நிலையமும் பொது நூல்நிலையமும் இணைந்து புத்தகக் கண்காட்காட்சியை அண்மையில் நடத்தினுர்கள்.

அதிற் கலந்துகொண்ட யாழ். பல்கலைக்கழகத் துணைவேந்தர் ஓர் யோசனையை முன் வைத்தார். அது என்ன?

அமெரிக்கத் தகவல்நிலையத்தின் நூல்நிலையக் கிளையொன்றை யாழ்ப்பாணத்திலும் அமைக்கக் கோரினுர். இது நியாயமான கோரிக்கை.

பல்வேறு பகுதியினரின் ஒத்துழைப்போடும் நூல்நிலையம் மீண்டும் மலர்ச்சி பெறவேண்டும்.

## அருள்வா ரிதியே கேதீஸ் வரனே

ராகம் – வசந்தா தாளம் - ஆதி

பல்லவி

கருணு நிதியே கௌரீஸ் வரனே!
அருள்வா ரிதியே கேதீஸ் வரனே!!
...(கருணு...)

அனுபல்லவி

கலங்கும் அடியார் கலங்கா வண்ணம்
துலங்கும் துணையே விளங்கும் சுடரே!
...(கருணு...)

சரணம்

உன்பெயர் ஓதிடும் என்குறை கேளாய்!
உன்புகழ் பாடிடும் என்நிலை பாராய்!!
உன்னருள் போற்றிடும் என்துயர் தீராய்!
உன்பதம் ஏற்றிடும் எந்தனை ஏராய்!!!
...(கருணு...)

-'முருகு'

[இன்று திருக்கேதீச்சரத்தில் 5ம் திருவிழா]

மருத்துவ பீடக் கலை முயற்சி

# நற்கருத்தை விதைக்க நாடகம் ஓர் ஊடகம்!

கலை கலைக்காகவல்ல; நற்கருத்துக்களைப் பரப்புவதற்காகவே என்பதன் விளக்கத்தை நேரிலே கண்டோம்... மருத்துவ பீடத்தின் நாடகப் போட்டியில்...!

''கானல்'', ''ஜீவயாகம்'', ''ஆடற் பொற்சுண்ணம்'', ''பிணம் தின்னும் பாத்திரங்கள்'', ''வண்ணப் பூச்சிகள்'' ஆகிய ஐந்து நாடகங்களும் ஐந்து வருட மாணுக்கர்களாலும் மேடையேற்றப்பட்டன. நாலாவது முறையாகவும் முதலாம் பரிசைத் தட்டிக்கொண்டார்கள், ஐந்தாம் ஆண்டு மாணுக்கர்கள். நல்ல Record; நமது சபாஷ்!

''ஜீவயாகம்'' —நெறியாள்கையின் அனுபவ முத்திரை பளிச்சிட்டிருக்கின்றது. கூட்டு முயற்சி — மேடையனுபவம்— பின்னணி இசை—சொல்லவேண்டிய கருத்தைச் சொல்லவேண்டிய விதத்தில் தெளிவாகவே சொல்லிவிட்ட உத்தி— முதலாம் இடத்தைப் பெறத் தகுதியாக்கிவிட்டனவோ!

பாரிய நவீன ஓவியம் பின்னணியில் இருந்தது, நாடக வடிவம் எப்படியெல்லாம் புது அவதாரங்களை எடுக்கும் என்பதற்கு கட்டியம்கூறியதோ...?

கிராமத்து மக்கள் நிலை, மனிதாபிமானம் முதலியன நகைச்சுவை உட்படப் பல் சுவையோடு வெளியாகின. சிறந்த நடிகருக்கான முதலாம் பரிசைப் பெற்றுக்கொண்ட அந்தக் கிழவனின் நடிப்பு... அபாரம்...! நோயாளிக் குழந்தையை கையிலேந்தியபாவனையோடு, கதறிக்கொண்டு, திடீரென வந்தாளே அந்தக் கிராமத்துப் பெண்...! அதிர்ந்து போனேும், அனுதாபத்தோடு! அதை 'நான்' சொல்லக் கூடாது; அருகில் இருந்தவர்கள் சொன்னுர்கள்... அந்த நடிப்புச் சிறப்பைப் பற்றி!

ஏனைய நான்கு நாடகங்களும் எவ்விததத்திலும் சோடை போகவில்லை, ஒருசில குறைகளைத் தவிர. இரண்டாம் வருடத்தினரின் நாடக நேரம்...! எப்படிக் கோட்டைவிட்டார் இயக்குநர்...? அதிலே காலத்திற்கேற்ற கருத்துக்கள்— வீடுகள் தோறும் அவலக் காட்சிகள்— நிவாரணக் கொடுப்பனவுகள்— சிந்திக்க வைத்தன பலரை. கண்ணுடியைத் தொலைத்துவிட்டுத் தேடினுரே அந்தக் கிழவர் இயற்கையான ந்டிப்புத்தான்!

மூன்ரும் வருடத்தினரின் நாடகம், சீதனப் பேய்களுக்கு, வெளிநாட்டு மோகத்திற்கு நல்ல சாட்டையடிகள்! தாயாக நடித்தவரும், கிழவராக நடித்தவரும் பாத்திரமறிந்து நடித்திருக்கிருர்கள், ஏனையோரின்ஒத்துழைப்போடு வீட்டிற்கும் உதவாத நாட்டிற்கும் உதவாத மருத்துவப் படிப்புக் கானல் நீராயிற்று என்று முடித்தார்களே! சொல்லவேண்டிய கருத்து அதுதானு? பின்னணி இசைக்கும் பயிற்சிக்கும் கூடிய கவனம் செலுத்தியிருக்கவேண்டாமோ?

''வண்ணத்துப் பூச்சிகள்'' தற்கால நிலையை அப்படியே படம் பிடித்துக் காட்டியிருக்கிருர்கள். உருக்கமான நடிப்புக்கும், கண்டனங்களுக்கும், கிண்டல்களுக்கும் குறைவில்லை பூசை நேரத்தில்—பெண்கள் உரையாடல் —நல்ல படப்பிடிப்பு 'பொம்மர்' வந்த காட்சி எமக்கெல்லாம் எச்சரிக்கைதான்!

முதலாம் வருடத்தினரின் கன்னி முயற்சி, திரௌபதையாக வந்த கன்னியின் முயற்சியோ? பழைமையையும் புதுமையையும் இணைத்துப் புரட்சிகரமான பரிசோதனையில் ஈடுபட்டிருந்தார்கள். திரௌபதையாக நடித்தவரின் ஆவேசம் நல்ல நடிப்புத்தான்; 'கண்ணகி'யாக நடிக்க வெகு பொருத்தமானவரைக் கண்டுபிடித்துள்ளோம் என்ற களிப்பு நமக்கு! எடுப்பான குரலில் பாடி நடித்த பலர் இசை நாடகங்களுக்கும் தகுதியானவர்கள். வசனம் அவர்களுக்குத் தேவைப்பட்டிருக்கவில்லை; பாரதியாரின் 'பாஞ்சாலி சபதம்' கைகொடுத்திருக்கிறது. பாத்திரங்களுக்கேற்ற தோற்றம்...? குறை சொல்ல இடமில்லை; குறிப்பிட்ட தொகைக்குள் இருந்துதானே Selection நடந்திருக்கிறது! சிறந்த வழிகாட்டல் இருந்தால் —ஒளிமயமான எதிர்காலம்... இருக்கத்தான் செய்கிறது!

பார்வையாளர்களாக வந்த பண்பட்ட கலைஞர்கள் அங்கு பேசிக்கொண்டது...? ''ஆண்டுகள் நீண்டாலும் தவருது போட்டிகள் நடாத்தி கலையார்வம் காட்டுகிருர்களே மருத்துவபீடத்தினர். ஆனுல்...!'' அவர்கள் சொன்னதை நாம் தொடரவில்லை. என்ன சொல்லிபிருப்பார்கள் என்பதை ஏனைய பீடத்தினர் எண்ணிப் பார்க்கவேண்டாமோ...?

— சிவா.

## சமயத்தை விளங்க வேண்டாமா?

(1) பஞ்ச பூதங்கள் எவை?

| | | |
|---|---|---|
| பிருதுவி | - மண் | - கச்சியேகம்பம் |
| அப்பு | - நீர் | - திருவாணைக்கா |
| தேயு | - தீ | - திருவண்ணுமலை |
| வாயு | காற்று | - திருக்காளத்தி |
| ஆகாசம் | - வெளி | - சிதம்பரம் |

திருவாரூரைப் பிருதிவித்தலம் என்பதுமுண்டு.

(2) செற்றவர் புரங்கள் செற்றவெஞ்சிவனை ... (திருவிசைப்பா) கருத்தென்ன? கதை என்ன?

செற்றவர்புரங்கள் - பகைத்தவர்களான மூவரின் திரிபுரங்கள்; செற்ற - சாம்பராக்கிய
வெம்சிவனை - கொடுமையான சிவனை

தாரகாட்சன், கமலகாட்சன், வித்தியுன்மாலி என்பார் தவம்செய்து பொன், வெள்ளி, இரும்புகளினுலான பறக்கும் கோட்டைகளைக் கொண்டு, வான வழியே சென்று, கீழிறங்கி முனிவர்களுக்கும், மக்களுக்கும் பேரிடையூறு விளைவித்து வந்தனர். முனிவர்களும், மக்களும் இறைவனிடம் முறையிட இறைவன் பூமியைத் தேராகவும் சந்திர சூரியர்களைச் சக்கரங்களாகவும் வேதங்கள் நான்கினையும் நான்கு குதிரைகளாகவும் பிரமனைச் சாரதியாகவும் கொண்டு மேருமலையை வில்லாக வளைத்து, வாசுகியை நாணுகப்பூட்டி திருமாலை அம்பாகக் கொண்டு சென்று அம்மூன்று கோட்டைகளையும், அம்மூவர்களையும் கொல்லாது நகைத்து எரித்தார். இது அவர்களுடைய செருக்கினை அடக்கி அவர்களை நலவழிப்படுத்த இறைவன் மேற்கொண்ட மறக்கருணையாகும்.

தொகுப்பு: சி. ;கலையரசி

# பலதும் பத்தும்

## எப்படிச் சேகரித்தார்கள் ..?

யாழ். பொது நூல் நிலையம் எரிக்கப்பட்டதல்லவா...? சோர்ந்துவிட்டவர்கள் பலர்; ஆனுல்... நூல்களைச் சேர்த்து மீண்டும் இயங்கவைக்க வேண்டுமென்று சேர்ந்து விட்டார்கள் சிலர்.

கொழும்பிலே — சரஸ்வதி மண்டபத்திலே - ஒரு குழு நூல்கள் சேகரிக்கும் பணியில் இறங்கியது நூல சேகரிப்பு வாரம் கொண்டாடப்பட்டது.

கட்டடக்கலைஞர் வீ. எஸ். துரைராசா, ஐ. தி. சம்பந்தன் உட்படப் பல நல்லிதயம் கொண்டோர் சுறுசுறுப்பாக இயங்கினுர்கள்.

போஸ்டர் அடித்துக் கொழும்பு வீதிகளிலே ஒட்டினுர்கள். அந்தப்போஸ்டர்களில் காணப்பட்ட சிறு கவிதை என்ன தெரியுமா...?

''இடிந்த கோயில்
எழுந்து நிமிர
முடிந்த உதவி
வலிந்து தருக!
நூலோ பணமோ
நுமது விருப்பம்...!!

தொண்டர்கள் நெஞ்சிற் காணப்பட்ட சின்னத்தில் நூல்நிலையத்தின் பட மிருந்தது; எழுதப்பட்டிருந்தது என்ன...? ''நெஞ்சிலே ஏற்றினுர் நெருப்பை 1-6-81 எரிந்த தினம்!''

நூல்கள் குவிந்தன; அவற்றை ஒழுங்காக்கி தரம் பிரித்து, பதிந்து வைக்கக் கொழும்புப் பல்கலைக்கழகத் தமிழ் மாணுக்கர்கள் பணியாற்றினுர்கள். இரவு பகலலென்று பாராது கூடவே இருந்து செயற்பட்டார்கள் செ.குமாரசாமி தம்பதிகள். போஸ்டர் வாக்கியமும் அவருடையதே...!

யார் இவர்...? நாடாளுமன்றத்திலே உரை பெயர்ப்பாளராக கடமையாற்றிப் பின் திம்பு மட்டும் சென்று வந்தவர்!

வாணி

லெப். கேர்ணல் ராதா மற்றும் 11வேங்கைகள் நினைவாக!

# முள்ளிக்குளத்தில் நடந்த கலை கலாசார விழா

(மன்னார்)

முள்ளிக்குளம் வீரத்தோடு தியாகத்தை அரவணைத்த லெப். கோர்ணல் ராதா, மற்றும்பதினெருவீரவேங்கைகளை நெஞ்சார நினைவு கூர்ந்தது கடந்தமாதம் 19-ம் 20-ம் திகதிகள். லெப்: கேணல் ராதா விளையாட்டரங்கில் விளையாட்டுப்போட்டி, கலை கலாச்சார நிகழ்ச்சிகள் நடைபெற்றன.

மன்னார் மாவட்டத்தில் தலைமன்னார் தொடக்கம் முழங்காவில் வரை சகல இடங்களிலிருந்தும் மக்கள் கலந்து கொண்டனர்.

முள்ளிக்குளம் பிரமுகர் திரு. அமிர்தம் குரூஸ் தலைமையில் நடந்த விழாவில் மன்னார் அரச அதிபரின் பிரதிநிதிகளான 'புனர் வாழ்வுத்திட்ட பணிப்பாளர்' திரு. கே. கணேஸ், தலைமைப்பீட உதவி அரசாங்க அதிபர் திரு. எஸ், எம். குரூஸ் மற்றும் உயர் அரச அதிகாரிகள் பிரதம அதிதிகளாகக் கலநதுகொண்டார்கள்.

கௌரவ விருந்தினராசத் தளபதி சுபன், சிறப்பு விருந்தினராக மன்னார் அரசியல் பொறுப்பாளர் திரு. அ. சுரேஷ், முள்ளிக்குளம் முகாம் பொறுப்பாளர் திரு. கெக்கு முள்ளிக்குளம் பிரதேசப் பொறுப்பாளர் திரு. ரமேஸ்லர், இன்னும் பல பிரதேசப் பொறுப்பாளர்களும் பங்கு பற்றினர்கள்.

அரசியல் பொறுப்பாளர் திரு, அ. சுரேஸ் விடுதலைப் புலிகளின் இன்றைய நிலைப் பாட்டையும் மக்களின் ஒத்துழைப்பைப் பற்றியும் எடுத்துக் கூறினர்.

தியாகச்செம்மல்களின் நினைவாக நினைவுத்தூபிகளும் திரை நீக்கம் செய்யப்பட்டன.

விடுதலைப்புலிகளின் மகளிர் முன்னணியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் உட்பட பிரதேச மாவட்டப் பொறுப்பாளர்கள் சிறப்புச் சொற்பொழிவு ஆற்றினர்கள்.

கலைநிகழ்ச்சிகளில் முருங்கன் கலைஞர்களின் 'கல்சுமந்த காவலர்கள்', பேசாலைக் கலைஞர்களின் நாட்டுக் கூத்து, வங்காலைக் கலைஞர்களின் சிலம்பின் செல்வி,, தலைமன்ஞர்க் கலைஞர்களின் சமூக நாடகம் மற்றும் தாழ்வுப்பாடு முழங்கா ல் வாழ்க்கை பெற்றுன்கண்டல், கள்ளியடி பெரியமடு, குமுளமுனை, வஞ்சியங்குளம், ஆலங்கேணி, நறுவிலுக்குளம், ஒலிமடு, முகலி, அடம்பன் ஆகிய கிராமத்துக் கலைஞர்களின் கலைநிகழ்சசிகளும் இடம்பெற்றன.

நிகழ்ச்சிகளில் தெரிவுசெய்யப்பட்டோருக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. முள்ளிக்குளம் கிராமசேவை அலுவகர் திரு. அந்தோனிதாஸ் பெர்னண்டோ நன்றி கூறினர். (85)

# "ப. நோ. கூ. சங்க இயக்குநர் வெற்றிடத்தை நிரப்ப ஏன் இந்த மௌனம்?"

(யாழ்ப்பாணம்)

"சுன்னுகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் இயக்குநர் ஒருவரின் தெரிவு செல்லுபடியற்றதென கடந்த ஏப்ரல் மாதம் 2ம்திகதியாழ்கூட்டுறவு அபிவிருத்தி உதவி ஆணையாளர் அறிவித்திருந்தும் இதுவரை அவ் வெற்றிடத்துக்கு ஒருவரை ஒத்துத் தேர்ந்தெடுப்பதற்கு ப. நோ. கூ. சங்கத்தின் நிர்வாகமோ அல்லது கூட்டுறவுத் திணைக்களமோ எதற்காக மௌனம் சாதித்து வந்துள்ளது?

இவ்வாறு சுன்னுகம் பலநோக்குக் கூட்டுறவுச் சங்க முன்னுள் பணிப்பாளரும், பொதுச்சபை உறுப்பினருமான திரு. இ. பரமேஸ்வரலிங்கம் 'ஈழநாடு' வுக்கு அனுப்பிய கடிதத்தில் குறிப்பிட்டிருந்தார்.

கடிதத்தில் அவர் மேலும் தெரிவித்ததாவது: "கிளைகளில் வெற்றிடங்கள் ஏற்பட்டால் அவ்விடத்துக்கு ஒருவரை ஒத்துத் தேர்ந்தெடுப்பதற்கு சங்க உபவிதிகளில் ஏற்பாடு உண்டு. சங்க இயக்குநர் குழுவிலும் வெற்றிடம்ஏற்பட்டால் ஒருவரை ஒத்துத் தேர்ந்தெடுப்பதற்கு ப. நோ. கூ. சங்க உப விதிகளிலும் ஏற்பாடு உண்டு. அப்படியாயின் ப. நோ. கூ. சங்க தாவடிக் கிளை 10ல் ஏற்பட்ட ஒரு வெற்றிடத்துக்காக இயக்குநர் சபையில் ஏற்பட்ட வெற்றிடத்தை நிரப்பாமல் இருப்பதற்குரிய காரணம் என்ன? இதனை ப. நோ. கூ. சங்க பொதுச்சபையும், இயக்குநர் சபையும் நடவடிக்கை எடுக்காமல் இருப்பது கவலைக்குரியது. அதுபற்றி கூட்டுறவு உதவி ஆணையாளருக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது." (152)

## பாலர் பாடசாலை அமைக்க ஏற்பாடு

(நாவற்குழி)

தச்சன்தோப்பில்ஸ்ரீமுருகன் சனசமூக நிலையத்தினரால் ஒரு பாலர் பாடசாலை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதற்கான சகல ஏற்பாடுகளையும் நிதி வசூலையும், ஸ்ரீ முருகன் சனசமூக நிலைய நிர்வாகிகள்மேற்கொண்டுள்ளனர். இப்பாலர் பாடசாலைக்கான அடிக்கல் நாட்டுவிழா யூன் மாதம் 4ம் திகதி நடைபெறவிருக்கிறது. (107)

# கிராமிய மட்டத்தில் தலைமைத்துவத்தைஉருவாக்க நடவடிக்கை எடுக்கப்படும்

(மட்டக்களப்பு)

"மக்களின் சமூக, பொருளாதாரத் தேவைகளை இனம்கண்டு கிராமிய மட்டத்தில் தலைமைத்துவத்தை உருவாக்கி அந்தத் தலைமைத்துவத்தின் மூலம் கிராமங்களை முன்னெடுத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கவுள்ளோம்.

இவ்வாறு மட்டக்களப்பு அரசடிவித்தியாலயத்தில் இரண்டு நாள் கருத்தரங்குக்குத் தலைமை வகித்துப் பேசிய மட்டக்களப்பு மாவட்ட குடும்பத் திட்டச் சங்கச் செயலாளர் திரு. கா. நடராசா கூறினர்.

மேற்படி சங்கத்தினுல் ஏற்பாடு செய்யப்பட்ட இக்கருத்தரங்கில் அவர் தொடர்ந்து பேசியதாவது:-இதற்காக இதுவரை கவனிக்கப்படாமல் இருந்த 10 கிராமங்களை நாம் தெரிவு செய்துள்ளோம். வறுமை, போஷாக்கின்மை போன்றவற்றிலும் கூடிய கவனம் செலுத்தப்படும். மனித தேவையின் முன்னுரிமைப்பட்டியலில் 1ம், 2ம், 3ம் இடங்களைக் கல்வியே வகிக்கின்றது. கல்வியில் பின்தங்கியிருப்பதே ஏனையவற்றில் பின்தங்கியிருப்பதற்குக் காரணமாகும்.

வடக்கு-கிழக்கு மாகாணச் செயலாற்று முகாமையாளர் திரு. ஏ. எஸ். பூவேந்திரன் பேசுகையில் கூறியதாவது; நாம் ஒவ்வொருவரும் நன்மதிப்புப் பெற்றநிலையில் இயங்குவதுடன் மனத்திடத்தோடும் செயற்படவேனடும். எந்தக்கட்டத்திலும் செயல்படக்கூடிய திடசங்கற்பம் இருக்கவேண்டும்.

அரச சார்பற்ற நிறுவனங்கள் இட்ட அத்திபாரத்திலேயே அரசுநிற்கின்றது. குறிப்பாக புனர்வாழ்வுப் பணிகளில் அரச சார்பற்ற நிறுவனங்களின் பங்களிப்பு அரசுக்குப் பேருதவியாக அமைந்துள்ளது.

இலங்கை குடும்பத் திட்டச் சங்கத்துக்கு அரசு வருடா வருடம் 75 ஆயிரம் ரூபாவை மானியமாகக் கொடுக்கிறது. (121)

# "இலங்கை மக்களுக்கு உயர்ந்தரக தேயிலை வழங்கப்படவேண்டும்"

(கொழும்பு)

இலங்கை உலகில் சிறந்த தேயிலையை உற்பத்தி செய்கின்ற நாடாக இருந்தபோதிலும் தரமான தேயிலை இலங்கையர்களுக்கு வழங்கப்படவில்லையென்று பெருந்தோட்டத் தொழில்துறை அமைச்சரும். பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான ரஞ்சன் விஜயரத்ன தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை தனது அமைச்சில் நடைபெற்றமாநாடொன்றில் கொழும்பு கொமேர்ஷல் கம்பனிப் பணிப்பாளர் மத்தியில் பேசுகையில் இவ்வாறு கூறினர்.

அவர் மேலும் அங்கு பேசுகையில் கூறியதாவது:-

இலங்கையில் அருந்தும் தேநீர் மனிதபாவனைக்கு உகந்தது அல்ல. தொடர்ந்து இலங்கை மக்களுக்குச் சிறந்த ரகத் தேயிலையை வழங்க முயற்சிகள் எடுக்கப்படவேண்டும்.

உள்ளூர்ச் சந்தையிலும் சிறந்த ரகத் தேயிலை விநியோகிக்கப்படுவதை அவதானிக்க வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும்.

## அநாதரவான சிறுவர் விபரம்

(காங்கேசன்துறை)

வலி. வடக்கில் அநாதரவற்றிருக்கும் சிறுவர்கள் பற்றிய விபரங்கள் திரட்டப்படுகின்றன.

வலி. வடக்கு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள கிராமசேவகர் பிரிவுகள் தோறும் இவ்விபரங்களைத் திரட்டும் வேலைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன

தந்தை, தாய் ஆகியோரை இழந்து அநாதரவான நிலையிலுள்ள சிறுவர்கள் தந்தையை இழந்து பராமரிக்கக் கூடிய வசதிகள் இல்லாது இருக்கும் சிறுவர்கள் ஆகியோரைப்பற்றியே இந்த விபரங்கள் சேகரிக்கப்படுகின்றன. (86)

## அ. வி. திட்டங்களை அரச அதிபர் பார்வையிடுவார்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் இம் மாதம் 12ம் திகதி ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்திற்கு உத்தியோக பூர்வ விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார்.

ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள அபிவிருத்தித் திட்டம் மற்றும் நிவாரண வேலைகளை பார்வையிடுவதுடன் பொது மக்களையும், சங்கப் பிரதிநிதிகளையும் அன்றைய தினம் சந்திப்பார். (153)

## வடமாகாண அரச ஒப்பந்தகாரர் சங்கம் கூடுகிறது

(யாழ்ப்பாணம்)

வடமாகாண அரசாங்க ஒப்பந்தக்காரர்சங்கத்தின்விசேட கூட்டம் இம்மாதம் ஐந்தாம் திகதி நடைபெறும்.

இதுசம்பந்தமாக சங்கசெயலாளர் விடுத்துள்ள செய்தியில் வடமாகாண அரசாங்க ஒப்பந்தக்காரர்சங்க அங்கததவர்கள் அனைவரும் எதிர்வரும் 5ம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல்கோண்டாவிலிலுள்ள வடமாகாண அரசாங்க ஒப்பந்தக்காரர் சங்கத் தலைமைக் காரியாலயத்தில் சமூகமளிக்குமாறு கோரியுள்ளார்.

# "நூலகங்கள் சுற்றுடலின் கலாசார, தகவல் நிலையமாக செயற்படவேண்டும்"

(யாழ்ப்பாணம்)

"நூலகம் என்பது வெறுமனே புத்தகங்களை இரவல் கொடுக்கும் நிறுவனமாக மட்டும் இயங்காமல் தான் சார்ந்திருக்கும் சுற்றுடலின் கலாசார நிலையமாகவும், தகவல் நிலையமாகவும் செயற்படவேண்டும்" என்று திருநெல்வேலி ஈவ்லின் ரத்னம் ஞாபகார்த்த இன்ஸ்ரிரியூட்டின் நூலகர் திரு. ந. செல்வராசா தெரிவித்தார்.

அறவழிப் போராட்டக் குழு நிர்வாக இயக்குநர் திரு. க. ஜீவகதாஸ் தலைமையில் காந்தி நினைவரங்கில் நடைபெற்ற 'நூல் வங்கித் திட்டம்' பற்றிய கருத்தரங்கில் கலந்து கொண்டு பேசுகையிலேயே அவர் இவ்வாறு கூறினர்.

அறவழிப்பணிமனைத் தொண்டர்கள், பாலர் பாடசாலை ஆசிரியர்கள் கலந்துகொண்ட இக்கலந்துரையாடலில் திரு. செல்வராசா மேலும் பேசுகையில் கூறியதாவது:

"எமது பிரதேசத்தில் நூலகத்தின் தேவை இன்று உணரப்பட்டுவந்தாலும் அவற்றை தொடர்ந்து நடத்துவதுதென்பது ஒரு சிக்கலான விடயமாகத் திகழ்கிறது. யாழ்ப்பாணத்தில் 47 பொது நூலகங்கள் இயங்குகின்றன. இவை யாவும் நூல்களை இரவல் கொடுக்கும் நிறுவனங்களாக இயங்கி வருகின்றன.

"இந்த நிலை மாற்றப்பட்டு நூலகங்களுடைய சேவைகள் விஸ்தரிக்கப்படவேண்டும்.

"எம் மத்தியிலே ஆரம்பிக்கப்படுகின்ற நூலகங்களின் ஆயுள் மிகக் குறைந்த காலமாக இருக்கிறது.

"இந்தியப் பிரதமர் திருமதி இந்திரா காந்தி இறந்தபோது அவரது ஞாபகார்த்தமாக யாழ்ப்பாணத்தில் 17 நினைவு நூலகங்கள் திறக்கப்பட்டன. இன்று அவை எங்கிருக்கின்றன என்பதே தெரியாது.

"கிராமிய நூலகம், பொது நூலகம், நடமாடும் நூலகம் என்று பல நூல்க சேவைகள் இருக்கின்றன. இவற்றின் வரிசையிலே இப்பொழுது நூல் வங்கித் திட்டம் ஆரம்பிக்கப் படவுள்ளது.

"நூல் வங்கியில் ஒரு குறிக்கப்பட்ட அளவு புத்தகங்களை ஒப்படைத்து ஒருவர் உறுப்பினராகச் சேரலாம். பின்னுல் அவர் எவ்வளவு புத்தகங்கள் ஒப்படைத்தாரோ அதே தொகையில் வங்கியிலிருந்து நூல்களை இரவலாகப் பெற்று வாசிக்கலாம்.

"இவ்வாறு ஒவ்வொரு உறுப்பினரும் நூல்களை ஒப்படைப்பதன் மூலம் பல எண்ணிக்கையான நூல்கள் வங்கியில் இருப்பதுடன் அவற்றைப் பலரும் வாசிக்கும்நிலை ஏற்படும்."

கருத்தரங்கு இறுதியில் கே. துரைசிங்கம் நன்றியுரை வழங்கினர்.

## அரசியல்

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

வி. க. காசுபிள்ளை, மறைமலை அடிகள் ஆகியோர் பெயரில் பல்கலைக்கழகத்தில் ஆய்வுரை நடத்தவேண்டும். அதைப் புத்தக வடிவில் வெளியிடவேண்டும்.

### பரிசு

சிறந்த ஆய்வுக் கட்டுரை எழுதுபவர்களுக்கு வட்டித் தொகையிலிருந்து பரிசு வழங்க வேண்டும்,

## விழிப்பு குழுக்கள் அமைக்க ஏற்பாடு

(வேலணை)

தீவுப்பகுதியில் விழிப்புக் குழுக்களை அமைப்பதில் தமிழ் ஈழவிடுதலைப்புலிகள் நடவடிக்கைகளை எடுத்துவருகின்றனர்.

இவ்வாறு விழிப்புக் குழுக்களை அமைப்பதால் அவற்றின் மூலம் கிராமங்களில் நடைபெற்று வரும் களவுகள், கொள்ளைகள் சட்டவிரோத மின்சாரம் பெற்றுக்கொள்ளல் என்பவற்றை கண்டுபிடித்து தடுக்க முடியும் எனக்கூறப்படுகிறது. இதற்கான அமைப்பு வேலைகளை சிற்றூர் அவை உறுப்பினர்கள் மேற்கொண்டு வருகின்றனர். (75)

## வீரசிங்கம் மண்டபத்தைப் புனரமைக்க 1 கோடி 18 லட்சம் ரூபா தேவை

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபைக்குச் சொந்தமான யாழ். வீரசிங்கம் மண்டபக் கட்டிடத்தை முழுமையாகத் திருத்துவதற்காகக் கட்டிட நிபுணர்களைக்கொண்டு செய்த மதிப்பீட்டின்படி ஒரு கோடி 18 லட்சம் ரூபா நிதி தேவைப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த வாரம் கூடிய யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபையின் பொதுச் சபை இந்தத் தொகையை ஒதுக்கித்தருமாறு தீர்மானம் ஒன்றின் மூலம் வடக்கு-கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரைக் கேட்டுள்ளது.

யாழ். வீரசிங்கம் மண்டபக் கட்டிடத்தைப் புனரமைப்பதற்குப் புனர்வாழ்வு புனரமைப்பு அமைச்சு ஆசிய அபிவிருத்தி வங்கியின் உதவியுடன் ஒரு கோடி 70 லட்சம் நிதியை ஒதுக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபையால் 1968ம் ஆண்டு இக்கட்டிடம் கட்டப்பட்டது. இதற்கான நிதியை வடபகுதிக் கூட்டுறவுச் சங்கங்களின் இலாபத்தில் கட்டிட நிதிக்கு ஒரு பகுதியை ஒதுக்கி அப்பணத்தின்மூலமே இக்கட்டிடம் கட்டப்பட்டது குறிப்பிடத்தக்கது. [153]

## "சமுதாய விழிப்புணர்ச்சி ஏற்படுத்த சனசமூக நிலையங்கள் சிறந்த சாதனங்களாகும்"

(பருத்தித்துறை)

"கிராமிய எழுச்சியையும், சமுதாய விழிப்புணர்ச்சியையும் ஏற்படுத்துவதற்குச் சனசமூக நிலையங்கள் சிறந்தசாதனங்களாகத் திகழ்கின்றன. அல்வாய் தெற்கு பாரதிதாசன் சனசமூக நிலையம் சனசமூக நிலையத்திற்கு வேண்டிய இலட்சியத்துடன் சிறப்பாக இயங்குவது பாராட்டுக்குரியதாகும்."

மேற்கண்டவாறு யாழ். உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. எஸ். டிவகலால அல்வாய் தெற்கு பாரதிதாசன் சனசமூக நிலைய வெள்ளி விழாவிலும் மலர் வெளியீட்டு விழாவிலும் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

சனசமூக நிலையத்தலைவர் திரு. கே. நடராஜா விழாவிற்குத் தலைமை வகித்தார்.

தொடர்ந்து உரையாற்றிய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. டிவகலால குறிப்பிட்டதாவது: சனசமூக நிலையங்கள் கிராமிய பகுதிகளின் கல்வி, கலை. கலாசார சமூக பொருளாதார, விளையாட்டுத்துறைகளின் அபிவிருத்தி நடவடிக்கைளை மேற்கொண்டு கிராமப் பகுதிகளை பல்வேறு துறைகளிலும் முன்னணியில் திகழவைக்க வேண்டும். பல சனசமூக நிலையங்கள் கிராமப்பகுதிகளின் அபிவிருத்திகளுக்கு ஆற்ற வேண்டிய பணியை மறந்து வெறும் வாசிகசாலைகளாக மட்டும் இயங்குவது கவலைக்குரியதாகும்,

"சனசமூக நிலையங்கள் கிராமியப் பகுதிகளின் அபிவிருத்தி அலகுகளாகச் செயற்பட வேண்டும். கிராமிய இளைஞர் யுவதிகளின் வேலையில்லாப் பிரச்னைகளைப் போக்கக்கூடிய ஆக்க பூர்வ முயற்சிகளில் சனசமூக நிலையங்கள் முக்கிய பங்கெடுக்கவேண்டும். அவ்வப் பகுதி கிராமிய மூலவளங்கள் பற்றிய ஆய்வுகளை மேற்கொண்டு அம்மூலவளங்களை முழுமையாகப் பயன்படுத்துவதற்கான முயற்சிகளில் முழுமையாக ஈடுபட வேண்டும்

"கிராமிய ஒற்றுமையைப் பேணல், முதியோர் கல்வி, தொழில் நுட்பக்கல்வி அபிவிருத்தி, கிராமிய சுகாதாரப் பாதுகாப்பு, சுற்றுடல் சூழல் பாதுகாப்பு. மரம் நடும் இயக்கம், கைத்தொழில் அபிவிருத்தி, சுயதொழில் ஊக்குவிப்பு ஆகியவற்றிற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளவேண்டியது சனசமூக நிலையங்களின் முக்கிய கடமையாகும்.

"கிராமங்களினதும், கிராமிய மக்களினதும் தேவைகள், எதிர்பார்ப்புக்களை ஆராய்ந்து அறிந்து அத்தேவைகள் எதிர்பார்ப்புக்களை முன்னுரிமைப் படுத்தி அவற்றினை நடைமுறைப்படுத்த முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். சனசமூக நிலையங்களின் இலட்சிய வெற்றி அச்சனசமூக நிலையங்களின் உறுப்பினர்களின் கைகளிலேயே தங்கியுள்ளது. கிராமிய சனச சமூக நிலையம் சிறப்பாக இயங்குமானுல் அக்கிராமம் பல்வேறு துறைகளிலும் அபிவிருத்தியடையும். யாழ். மாவட்டத்தில் உள்ள 824 சனசமூக நிலையங்களும் சிறப்பாக இயங்குமானுல் அபிவிருத்தி நடவடிக்கைகளை மிகச்சுலபமாக மேற்கொள்ள முடியும்.

கரவெட்டி பிரதேசசபை விசேட ஆணையாளரும், உதவி அரச அதிபருமான திரு. ஈ. ஐயாத்துரை உரையாற்கையில், "அல்வாய்தெற்குபாரதிதாசன் சனசமூக நிலையம் மிகத்திறமையாகச் செயற்பட்டு ஏனைய சனசமூக நிலையங்களுக்கு முன்மாதிரியாகத் திகழ்வது பாராட்டப்பட வேண்டியதாகும். இச்சனசமூக நிலையம் மேலும் அபிவிருத்தியடைந்து இக்கிராம மக்களுக்குச் சிறந்த சேவையாற்ற வேண்டும்" என்றுர். (52)

## வரலாற்று நூல்கள் மிகவும் 'அவசியமாகும்

(காங்கேசன்துறை)

"எமது மக்களைப்பொறுத்தவரை வரலாற்று நூல்கள் மிகவும் அவசியமாகின்றன. ஆலயங்கள் பற்றிய ஆய்வுகள் எமது பழமை. பெருமை சமய உண்மைகள். ஆகியவற்றை எடுத்துக் காட்டுகின்றன. இப்படியான வரலாற்று நூல்கள் அதிகமாக வெளியாகவேண்டும்'

இவ்வாறு காங்கேசன்துறை காயத்துறை ஆனந்தப்பிள்ளையார் ஆலயம் குறித்த வரலாற்று நூல்வெளியீட்டுவிழாவில் கலந்து உரையாற்றிய யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர் திரு. நா. சுப்பிரமணியன் கூறினுர்.

மேற்படி ஆலய மண்டபத்தில் சட்டத்தரணி எம். யோககுமார் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் அவர் தொடர்ந்து பேசுகையில்; மத மாற்றம், வரலாறுகள் மறைக்கப்படுதல் போன்றவற்ருல் எமது சைவமதம் ஆபத்தை எதிர்நோக்கி நிற்கிறது. அதனைக்காகக சைவமக்கள் ஒன்றுபட்டு உழைக்கவேண்டும் என்றுர்.

மற்றும் பண்டிதர் மா. குமாரசாமி திருமதி சிவபாக்கியம் பாலநாதன் ஆகியோரும் உரையாற்றினர்.

மேற்படி ஆலயதர்மகர்த்தா திரு. க. ஏரம்பமூர்த்தியால் எழுதப்பட்ட மேற்படி நூலின் முதற்பிரதியை சட்டத்தரணி அ. குமரகுரு பெற்றுக்கொண்டார். (89)

## "ஆஸ்பத்திரி அபிவிருத்திக்கு உதவவேண்டும்"

(பண்டத்தரிப்பு)

"எமது அளவெட்டி கிராமத்திலுள்ளமக்களுக்கும் அயல் கிராமங்களை சேர்ந்தவர்களுக்கும் நீண்டகாலமாக வைத்திய வசதிகளை வழங்கிவரும் இவ் வைத்தியசாலையின் தேவைகளை ஆராய்ந்து அதை அபிவிருத்தி செய்து முன்னேற்றுவதற்கு தேவையான நடவடிக்கைகளை புதிதாக உருவாக்கப்படும் இச்சங்கம் மேற்கொள்ளுமென்று நம்புகின்றேன். பொதுமக்களின் பங்களிப்பைப் பெற்று சுகாதார திணைக்கள அதிகாரிகளின் ஒத்துழைப்புடன்இவ்வைத்திய சாலையை தரம் உயர்த்துவதற்கு நாம் முயற்சிக்கவேண்டும்".

இவ்வாறு அளவெட்டி அரசினர் வைத்தியசாலை அபிவிருத்திச்சங்கத்தின் அங்குரார்ப்பண கூட்டத்திற்கு தலைமை வகித்து ஆரம்பஉரை நிகழ்த்துகையில் ஓய்வுபெற்ற நிர்வாக உத்தியோகத்தர் திரு. இ. சபாரத்தினம் குறிப்பிட்டார்.

அளவெட்டி அரசினர் வைத்தியசாலை பொறுப்பதிகாரி டாக்டர் எஸ். தங்கவேல், பண்டிதர் க. நாகலிங்கம்திரு. த. கனகரத்தினம் ஆகியோர் உட்பட மற்றும்பலர் உரையாற்றினுர்கள்.

சங்கத்தின் புதுவருட நிர்வாகிகளாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் சோ. அருணுசலம், உப தலைவர் பண்டிதர் கே. நாகலிங்கம், செயலாளர் த. கனகரத்தினம், உப செயலாளர்: வ. சின்னப்பு, பொருளாளர்: க. கந்தையா, செயற்குழு உறுப்பினர்களாக ஆறு பேர்தெரிவுசெய்யப்பட்டனர். (72)

## விஞ்ஞான ஆசிரியர் கருத்தரங்கு

[மட்டக்களப்பு]

கல்முனை கல்வி மாவட்ட உயர்தர விஞ்ஞான ஆசிரியர்களுக்கான 5நாள் வதிவிடக் கருத்தரங்கு அண்மையில் கல்முனை ஸாகிராக் கல்லூரியில் நடைபெற்றது.

எண்பதினுயிரம் ரூபா செலவில் நடந்த இக்கருத்தரங்கில் 80பேர் கலந்துகொண்டனர்.

யாழ்ப்பாணம், மட்டக்களப்புஆகியஇடங்களிலிருந்து விரிவுரையாளர்கள் பங்குபற்றிய இக்கருத்தரங்கில் வடக்கு கிழக்கு மாகாண கல்விஅமைச்சின் செயலாளர் திரு. ஈ. ஜே. சற்குணராசா பிரதம அதிதியாகக் கலந்துகொண்டார்.

சுமார் ஐந்துவருட காலத்தின் பின்னர் நடைபெற்ற கருத்தரங்கு இது என்பது குறிப்பிடத்தக்கது. (121)

## இறுதிப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் பல்கலைக் கழக இராமநாதன் நுண்கலைப் பிரிவுக்கான இறுதிப் பரீட்சை 1990 ஜூன் மாதம் 4-ம் திகதி காலை 9மணிக்கு நடைபெறும்.

ஜூன் 5ம், 6ம், 7ம் திகதிகளிலும் மேற்படி பரீட்சை தொடர்ந்து நடைபெறுமென யாழ். பல்கலைக்கழக வட்டாரங்கள் தெரிவித்தன, (152)

## "திருவாசகம் ஆத்மீக தன்மை வாய்ந்தது"

(யாழ்ப்பாணம்)

"திருவாசகம் ஆத்மீகத் தன்மை வாய்ந்தது. திருவாசகத்தையே தனது ஆன்மீக நெறியாகக் கொண்டு பாரம்பரியத்தைப் பேணிக்காத்து வந்தவர் 'திருவாசகம்' ஸ்ரீசபாரத்தினம் சுவாமிகள். எம்பெருமான் ஈர்த்து ஆட்கொண்ட தத்துவம் சுவாமிகளிடம் உள்ளது. இறைவனுடைய திருவருள் நல்ல உள்ளம் உடைய அடியார்களிடம் உண்டு."

இவ்வாறு யாழ். பல்கலைக் கழக இந்து நாகரிகத்துறைத் தலைவர் கலாநிதி ப. கோபாலகிருஷ்ணன் 'திருவாசகம்' ஸ்ரீசபாரத்தினம் சுவாமிகள் நினைவு விழாவில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

இந்நினைவு விழா தொண்டமானுறு செல்வச்சந்நிதி சந்நிதியான் ஆச்சிரமத்தில் திரு. கரவைக்கிழார் தலைமையில் நடைபெற்றது. கலாநிதி கோபாலகிருஷ்ணன் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது

"தேனில் மகத்துவம் எப்படி உண்டோ, அதுபோன்றே எமது சமயத்திலும் எவ்வளவோ ஆத்மீகப்பலம்உண்டு. இத்தகைய ஆத்மீகப் பலம் பெற்ற திருவாசக சுவாமிகள் எம்மத்தியில் வாழ்ந்து அமரத்துவம் பெற்றது எமது சமயத்துக்குக் கிடைத்த பெருமைமாகும்.

வடபிராந்திய போக்குவரத்துச் சபைத்தலைவரும், யாழ். திவ்விய ஜீவன சங்கத்தலைவருமான திரு. சி. கனகரத்தினம் சிறப்புரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது: "திருவாசகம் கேட்போர் உள்ளத்தைக் கரைக்கும் சொல்லாற்றலையும், பொருளாற்றலையும் பெற்றுள்ளது. இதனுலேயே 'திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்" என்று சொல்லப்படுகின்றது. திருவாசகத் திருமுறையை ஓதி ஓதி அதன் செம்பொருளைக் கண்டவர் ஸ்ரீ சபாரத்தினம் சுவாமிகள்.

"இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே" என்று இறைவன் விழிக்கப்படுகின்றுன். அப்பேறப்பட்ட இறைவனை அடைதற்குப் பேதமற்ற மனநிலை அவசியமாகும். எது நடந்தாலும் அவன் செயல் என்று நினைந்து பிறர் குற்றம் குறைகளைப் பேசாது சிரித்துத் தொழுபவர்களுக்கே இறைவன் அருள் என்று திருவாச

(7-ம் பக்கம் பார்க்க)

## கூட்டுறவு ஊழியருக்கும் நிவாரணம் வழங்கப்படவேண்டும்

(பண்டத்தரிப்பு)

'வன்செயல்களினுல் பாதிக்கப்பட்ட அரசாங்க ஊழியர்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்களைப் போல கூட்டுறவுத்துறை ஊழியர்களுக்கும் நிவாரணம்வழங்கப்படவேண்டும்"

இவ்வாறு கொழும்பிலுள்ள கூட்டுறவு ஆணையாளரைக் கேட்டுக்கொள்ளும் முக்கிய தீர்மானம் ஒன்று கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்க பண்டத்தரிப்பு கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளது. பண்டத்தரிப்பு ப. நோ. கூ. சங்க மின்தறியாலை கட்டிடத்தில் நடைபெற்ற இக்கூட்டத்திற்கு கிளையின் உப தலைவர் திரு. து. முருகேசு தலைமை தாங்கினுர். கூட்டுறவுச் சங்க ஊழியர்களுக்கு முன்னர் வழங்கப்பட்டிருந்த வெளிநாட்டு வேலைவாய்ப்புக்காக இரண்டு வருட சம்பளமற்ற லீவில் செல்லும் வசதி தற்போது நிறுத்தப்பட்டுள்ளது என்றும் இதனை மீண்டும் நடைமுறைபடுத்துமாறும் சங்க நிர்வாகத்தைக் கேட்டுக்கொள்ளும் தீர்மானம் உட்பட மற்றும் பல தீர்மானங்கள் இக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டன.

புதுவருட நிர்வாகிகள் தெரிவு நடைபெற்றபோது தெரிவு செய்யப்பட்டவர்கள் விபரம் பின்வருமாறு:-

தலைவர்: க. திருநாவுக்கரசு, உப தலைவர்: நா வ. சிவபாதம், செயலாளர்; திருமதி ஜனீத்தா நல்லையா, உபசெயலாளர்: சி. மகேந்திரன், பொருளாளர்: எஸ், அன்ரன், செயற்குழு உறுப்பினர்களாக நான்குபேர் தெரிவுசெய்யப்பட்டனர். (72)

## இராசி பலன்

வெள்ளிக்கிழமை
01 - 0 6- 1990

மேடம்: புதியதிட்டம்,சுபகாரியம், உற்சாகம், நீசர் உதவி.

இடபம்: இடையூறு, பணவரவு, கோபம். உறவினர் உதவி.

மிதுனம்: சோம்பல், தொழிலிடத்தில் வரவேற்பு, இனசன வரவு.

கடகம்: சோம்பல், குழப்பம், ஆழ்ந்தசிந்தனை, உஷ்ண வியாதி.

சிங்கம்: பிடிவாதம், அற்பர் நேசம், உடல்உபாதை, யோசனை.

கன்னி; பணவரவு, ஆடம்பரம், தீவிரசிந்தை, செய்திகள்.

துலாம்: புகழ், தூரத்துச் செய்தி, பெண்களால் உதவி, பயம்.

விருச்சிகம்: சுபச் செய்தி, பீடை, பணவரவு, சுபகாரியம்.

தனுசு: அரச பயம், உழைப்பு, அற்பர்நேசம், மந்தப்போக்கு.

மகரம்: உஷ்ண வியாதி, காரிய தாமதம், புதியநட்பு.

கும்பம்: கோபம், நீசர் உதவி, குடும்ப சுகம், மாற்றம்.

மீனம்: ஏமாற்றம், அற்பரின் உபத்திரவம். ஆடம்பரச் செலவு அதிகரிப்பு.

இ. மகாதேவா

### உலக கிண்ண உதைபந்தாட்டத்தில்

## இங்கிலாந்து கோஷ்டியின் ஆட்டம்

# இம்முறை சிறப்புப்பெறலாம்

உதைபந்தாட்டப் போட்டியை உலகிற்கு முதலில் அறிமுகம் செய்துவைத்த இங்கிலாந்து தற்போது உலகின் 3-வது நாடுகளின் தரத்தில் இருக்கின்றது. இங்கிலாந்தின் உள்நாட்டுப் போட்டிகள் உலகப் பிரசித்தி பெற்றவை.




இங்குள்ள விளையாட்டுக்கழகங்கள் அனைத்திலும் உலகப் புகழ்வாய்ந்த பல வீரர்கள் பணத்துக்காக அக்கழகங்களில் சேர்ந்து விளையாடி வருகிறார்கள். உள்நாட்டுப் போட்டிகளில் கவனம் செலுத்தும் இங்கிலாந்து உலக அரங்கில் தனது தரத்தை உயர்த்தப் போதிய கவனம் செலுத்தாமலே இருந்துவருவதாக உலக அவதானிகள் தெரிவிக்கின்றனர்கள்.

இங்கிலாந்து உதைபந்தாட்டச் சங்கம் 1863ம் ஆண்டு முதன் முதலில் ஆரம்பிக்கப்பட்டபோதிலும் 1966ம் ஆண்டுதான் 8வது உலகக் கிண்ணப் போட்டியை இங்கிலாந்தில் நடத்தி அதில் தானே வெற்றிவாகையும் சூடியது.

1986ம் ஆண்டு மெக்ஸிக்கோவில் நடைபெற்ற ''உலகக் கிண்ணப்'' போட்டியில் இங்கிலாந்து போர்த்துக்கலிடமும், போலந்திடமும் தோல்வியடைந்து மொறுகோவை சமப்படுத்தியது. ஆனால் இம்முறை இங்கிலாந்துக் கோஷ்டி சற்றுப் பலம்வாய்ந்த நிலையில் இருப்பதால், 'கால்-அரை' ஆட்டங்களில் விளையாடத் தகுதி பெறலாமென இக் கோஷ்டியின் பயிற்சியாளர் 'பொபி றொப்சன்' தெரிவித்துள்ளார். இம்முறை ஆரம்பப் போட்டிகளில் இங்கிலாந்து, அயர்லாந்து, நெதர்லாந்து, எகிப்து ஆகிய நாடுகளைச் சந்திக்கின்றது. 22 வீரர்களடங்கிய இங்கிலாந்துக் கோஷ்டியில் புகழ்வாய்ந்த வீரர்களான பிறியன் றொப்சன், பிற்றர் சில்றொன் (கோல்காப்பு வீரர்), ஹரி லினேக்கர், ஜோன் பாண்ஸ் ஆகியோரும் இருக்கிறார்கள்.

நமது விளையாட்டு நிருபர்
'தேவா'

(9)

### சாதனைகள்

இங்கிலாந்து உலகக் கிண்ணத்தை 1966ம் ஆண்டு வென்றெடுத்தது. *1950, 1954, 1958, 1962, 1970, 1982, 1986*ம் ஆண்டுகளின் உலகக் கிண்ணப் போட்டிகளில் விளையாடத் தகுதிபெற்றது.

இதுவரை உலக முதற்தர ஆட்டங்கள் 34ல் பங்குபற்றி 15 போட்டிகளில் வெற்றியும், 10 போட்டிகளில் தோல்வியும், 9 போட்டிகளைச் சமப்படுத்தியும் 39 புள்ளிகளைப் பெற்றுள்ளது.

அடுத்து உருகுவேயின் தற்போதைய நிலைப்பாட்டைப் பற்றிப் பார்ப்போம்.

# மன்னார் செய்திகள்

(மன்னார்)

அடம்பன் மத்திய மகாவித்தியாலயத்தைச் சேர்ந்த 100 மாணவர்கள் எட்டு நாள் இலங்கை சுற்றுலாவை மேற்கொள்ளவிருக்கிறார்கள். இச் சுற்றுலாவுக்கு வித்தியாலய அதிபர் திரு. ஏ. யேக்கப் தலைமைதாங்கவுள்ளார். சரித்திரபிரசித்திபெற்ற இடங்கள், புராதன நகரங்கள் போன்றனவற்றை பார்வையிடுவார்கள்.

### சுற்றுலா யாத்திரை

நீண்ட நாட்கள் இடைவெளிக்குப்பின்னர் திருகோணமலையிலிருந்து திருக்கேதீஸ்வரம் கோயிலுக்கு யாத்திரை மேற்கொண்டு 160 யாத்திரீகர்கள் இரண்டு பஸ்களில் வந்து திருக்கேதீஸ்வர ஆலய கொடியேற்றத்தில் பங்கெடுத்து, மன்னார் நகரம், உப்புக்குளம் போன்ற பகுதிகளைச் சுற்றிப் பார்வையிட்டு மீண்டும் திருக்கேதீஸ்வரத்தை நோக்கிப் புறப்பட்டனர்.

### விஞ்ஞான ஆய்வுகூடம் இல்லை

மன்னாரிலுள்ள மிகவும் உயர்நிலைப் பாடசாலைகளில் ஒன்றாக விளங்கும் அடம்பன் மத்தியமகாவித்தியாலயத்தில் உயர்தர வகுப்பில் கல்வி பயிலும் விஞ்ஞான மாணவர்களுக்கு இதுவரையிலும் விஞ்ஞான ஆய்வுகூடமில்லை.

இதனால் விஞ்ஞானம் பயிலும் மாணவர்கள் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இதனை உணர்ந்த அடம்பன் பிரதேச விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணிப் பொறுப்பாளர் திரு. பாரதி மன்னார் கல்வித் திணைக்களத்துடன் தொடர்பு கொண்டு ஏற்ற நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

### பிரயாணிகள் பாதிப்பு

நெடுங்கண்டல், ஆட்காட்டுவெளி மக்கள், தமது நாளாந்த பயணத்துக்கு கூடுதலான நேரத்தைச் செலவழித்து மிகவும் கஷ்டப்பட்டுக்கொண்டிருக்கின்றார்கள்.

நெடுங்கண்டல், ஆட்காட்டிவெளிப்பாதை மிகவும் மோசமான நிலையிலேயே உள்ளது. இதனால் நெடுங்கண்டலுக்கும் மன்னாருக்கும் ஏறக்குறைய 12 மைல்கள் இருந்தாலும் மன்னாருக்கு பஸ் வர இரண்டு மணித்தியாலங்கள் செல்லுகின்றன. இதன் நிமித்தம் இப் பகுதி மக்கள் தங்களின் அன்றாட வேலைகளை ஒரே நாளில் செய்துமுடிக்க முடியாமல் கஷ்டப்படுகின்றார்கள்.

### மீனவர் முறையீடு

மன்னார் மாவட்டத்திலுள்ள குறிப்பாக, பேசாலை மீனவர்கள் இந்திய மீனவரின் தொல்லைகள் பொறுக்கமுடியாது மன்னார் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணி அலுவலகத்துக்கு இவர்களின் செயல்கள் குறித்து கண்டனம் தெரிவித்து ஓர் மகஜர் அனுப்பியுள்ளது.

அந்த மகஜரில் இவர்கள் எல்லை மீறி றோல் பிடிப்பதும் அல்லாமல் எமது மீனவர்களின் வலைகள், யந்திரம் போன்றவற்றையும் சேதப்படுத்தி செல்லுகின்றார்கள் என்றும் இதனால் ஏழை மீனவர்கள் பெரிதும் பாதிப்பு அடைந்திருக்கின்றார்கள் என்றும் இத் தொழிலே எமக்கு ஜீவாதார தொழிலாக இருப்பதால் இதற்கு தக்க நடவடிக்கை எடுக்குமாறும் கோரப்பட்டுள்ளது.

இது தொடர்பாக மன்னார் தீவு பொறுப்பாளர் திரு. லக்ஸ்மன் மேலிடங்களுடன் தொடர்புகொண்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ள உள்ளார்.

### லொறி விபத்து

கொழும்பிலிருந்து பேசாலைக்கு ஐஸ், எரிபொருட்கள் ஏற்றி வந்த சதா. சரணை என்ற லொறி கடந்த வியாழன் இரவு மடு வீதியில் பாலை மரத்தில் மோதி பலத்த சேதமடைந்து சாரதியும் கிளீனரும் மயிரிழையில் உயிர் தப்பினர்.

### கருத்தரங்கு

மன்னார் மாவட்ட கத்தோலிக்க பொதுநிலையினரின் வருடாந்தக் கருத்தரங்கு கடந்த 25, 26, 27ம் திகதிகளில் மடுத்திருப்பதியில் மிகவும் பக்தியாக நடைபெற்றது.

இக் கருத்தரங்கில் விசேட மறையுரைகள், ஒன்றுகூடல், கேள்விபதில்போன்றன இடம்பெற்றன. ஏறக்குறைய 250 பேர் கலந்துகொண்ட இந்த கருத்தரங்கு ஏற்பாடுகளை மடுத்திருப்பதியின் பரிபாலகர் அருட்திரு யேசுராஜா செய்துவைத்தார்.

### இடமாற்றம்

கடந்த எட்டு மாதங்களாக பேசாலையில் உதவிப் பங்குத்தந்தையாகக் கடமையாற்றிய அருட்திரு லா. செபஸ்தியான் குருஸ் இடமாற்றம் பெற்று சிலாவத்துறை முள்ளிக்குளம் பங்குகளின் பங்குத்தந்தையாக சென்றுள்ளார்.

அன்னாரின் சேவையைப் பாராட்டி பேசாலை பங்கு மக்கள் சார்பில் பங்குத்தந்தை அருட்திரு ஜே. பி. தேவராசா தலைமையில் ஓர் பிரிவு உபசார வைபவம் நடைபெற்றது. பொதுமக்கள் சார்பில் கிராமசேவை அலுவலர் திரு. எஸ். எஸ். துரம் உரையாற்றினார்.

### அதிருப்தி

கடந்த மாதம் 22ம் திகதி யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற அரச எழுது வினைஞர் சங்கத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டம் போதிய அறிவித்தலின்றி நடைபெற்றதையிட்டு மன்னார் அரச எழுவினைஞர் சங்கத்தைச் சேர்ந்த பலர் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

சங்கத்தின் மரபைக் கவனியாது திடீரென 22-ம் திகதி இப்பொதுக்கூட்டம் நடத்தியபடியால் பலர் சமுகம் கொடுக்கவில்லை என்பதும் குறிப்பாக வடக்கு-கிழக்கு மாகாணத்தில் கூடுதலாக இச் சங்கத்தின் அங்கத்தவர்கள் மன்னார் மாவட்டத்திலே பணிபுரிகின்றார்கள் என்று அங்கத்தவர் ஒருவர் தெரிவித்தார்.

### மாணவர் வளர்ச்சியில்

## பெற்றோர் ஆசிரியர்

## அக்கறை காட்டவேண்டும்

(அச்சுவேலி)

''மாணவர்களின் வளர்ச்சிக்கான நிலைப்பாடுகளில்பெற்றோருக்கும் ஆசிரியர்களுக்கும் இடையே ஒன்றுபட்ட நோக்கும் கூட்டும்பொறுப்பும் ஏற்படவேண்டும். அப்பொழுது தான் கல்வியின் உண்மையான இலக்கை அடைய முடியும்.''

இவ்வாறு மருதனமடம் கோட்டக்கல்வி அலுவலக கல்வி அதிகாரி திரு. எஸ். கணேசபிள்ளை கூறினார்.

அச்சுவேலி சரஸ்வதி வித்தியாசாலையின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டியில் பிரதம விருந்தினராக கலந்துகொண்டு திரு. என். கணேசபிள்ளை தொடர்ந்து உரையாற்றும்போது கூறியதாவது;

மாணவர்களின் கல்வி வளர்ச்சியில் குறைபாடுகளுக்கு ஆசிரியர்களே பொறுப்பு என கூறிவிட்டு பெற்றோர் விலத்திக் கொள்கின்ற நிலை இன்று காணப்படுகின்றது. இது ஏற்றுக்கொள்ளத்தக்கது அல்ல.

மாணவர்களின் சகல நிலைப்பாட்டின் தாக்க நோக்கங்களுக்கும் கூடுதலான பொறுப்பு பெற்றோரிடம் தங்கியுள்ளது. மாணவர்கள் ஒருநாளில் குறிப்பிட்ட சில மணி நேரம் மட்டும் பாடசாலையில் உள்ளனர். அதிகளவு நேரம்பாடசாலைக்கு வெளியில் பெற்றோருடன் வாழ்கின்றனர். இந்த நிலையில் பெற்றோருள் தங்கி நிற்கும் காலப் பகுதியின் செயற்பாடுகள் கூடிய செல்வாக்கு செலுத்தலாம். பாடசாலை நேரத்தில் நடைபெறும் செயற்பாடுகளை செயலிழக்கச்செய்யலாம்.

மாணவர்களின் வளர்ச்சியில் கூடிய கவனம் பாடசாலையில் செலுத்தப்படவேண்டும். அதற்கு பெற்றோர் தமது பூரண ஒத்துழைப்பை வழங்கி கூட்டுப் பொறுப்புடன்செயற்படவேண்டும்.

கிராமப்புறப் பாடசாலை மாணவர்கள் சகல துறைகளிலும் ஆற்றல் படைத்தவர்கள். நகர்ப்புறப் பாடசாலை மாணவர்களுக்குக் குறைந்தவர்கள் அல்ல என்பதை இன்றைய நிகழ்ச்சிகள் புலப்படுத்துகின்றன.

வெற்றிபெற்ற மாணவர்களுக்கான பரிசில்களை திருமதி சரோஜினிதேவி கணேசபிள்ளை வழங்கினார். (74)

'ஈழநாடு'

வார மலர்

03-06-1990

- ★ தென்பகுதி தமிழ் மக்கள்
- ★ உலக உதைபந்தாட்டப்போட்டி
- ★ தமிழிசை
- ★ ஈழத்து புதுக்கவிதை
- ★ உள்ளத்தின் உறுதி (சிறுகதை)
- ★ மறுமலர்ச்சி (கவிதை)
- ★ முருங்கையின் மகத்துவம்
- ★ முதியோர் உலகம்
- ★ மங்கையர் மஞ்சரி
- ★ மாணவர் மன்றம்
- ★ வைத்திய கலாநிதி பதிலளிக்கிறார்
- ★ நிர்வாகத்தில் நிகழ்பவை
- ★ யாழ். மாவட்ட கிராம சேவையாளர் பிரிவு

மற்றும்

வழக்கமான அம்சங்கள்

விலை ரூபா 4/-

## வருடாந்த இல்லப் போட்டி

(நாவற்குழி)

வரணி இடைக்குறிச்சி ஸ்ரீ சுப்பிரமணிய வித்தியாசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நாளை 2ம் திகதி நடைபெறவுள்ளது.

அதிபர் திரு. தம்புவின் தலைமையில் நடைபெறவிருக்கும் இப்போட்டியில் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் திரு. அன்ரன் அல்பிரட் பிரதம விருந்தினராகவும், சாவகச்சேரி உதவி அரசாங்க அதிபர் திரு. பூ. சுந்தரம் பிள்ளை சிறப்புருந்தினராகவும் உடற்கல்வி அதிகாரி திரு. த. அருணகிரிராஜா, வரணி கொத்தணி அதிபர் திரு. சி. துரைராஜா ஆகியோர் கௌரவ விருந்தினர்களாகவும் கலந்துகொள்வார்கள். சேவல்பிட்டி கந்தசுவாமி ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ இ. குகதாச சர்மா மங்கள விளக்கேற்றி இப்போட்டியை ஆரம்பித்துவைப்பார். (107)

### திருவாசகம்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

கம் சுவாமிகள் கூறுவார்.

சந்நிதியான் ஆச்சிரம நிர்வாகி திரு. செ. மோகனதாஸ் திருவாசக சுவாமிகள் திருவுருவப் படத்தைத் திரை நீக்கம் செய்துவைத்தார். (54)

## இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய வருடாந்த பரிசளிப்பு விழாவும் நிறுவுநர் நினைவு தினமும் இன்று 1ம் திகதி வெள்ளிகாலை நடைபெறும். பிரதம அதிதியாக யாழ். உதவிக்கல்விப்பணிப்பாளர் திரு. சி. தியாகராசா கலந்து கொள்வார்.

திருமதி ய. தியாகராசா பரிசில்களை வழங்குவார். விரிவுரையாளர், கல்விப்பீடம், யாழ் பல்கலைக்கழகம் கலாநிதி சபா ஜெயராசா நினைவுநர் தினவுரை நிகழ்த்துவார்.

## மக்கள் ஆதரவு அவசியம் தேவை

(நாவற்குழி)

''தற்போதுநிலவுகின்றஅமைதியை நிரந்தரமான அமைதியாக மாற்ற பொதுமக்களாகிய நீங்கள் எமக்கு போதிய பலத்தையும்ஆதரவையும் தரவேண்டும். அப்போதுதான் நாம் இந்தப் போராட்டம் என்ற பாலத்தைக் கடக்க முடியும்.''

வீரவேங்கைகளான ரஞ்சித் அலெக்ஸ், நிதி, நிமல், அப்துல்லா ஆகியோரது நினைவுச் சின்னத் திறப்புவிழாவில் கலந்துகொண்டு பேசும்போது தமிழீழ விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் தென்மராட்சி அரசியல் பொறுப்பாளர் திரு. பாப்பா இவ்வாறு குறிப்பிட்டார்.

இளைப்பாறிய ஆசிரியர் திரு. பொ. கந்தையா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் திரு. பாப்பா தொடர்ந்து பேசுகையில்: ''நாம் இன்று எமக்கு முன்சென்ற வீரவேங்கைகள் சிந்திய இரத்தத்திலேயே உலாவருகின்றோம் என்றும் அவர்களின் ஆத்மா சாந்தியடைய வேண்டுமானால் நாம் அவர்கள் விட்டுச்சென்ற பணியை முடிக்கவேண்டும். அதற்காக பொதுமக்களாகிய நீங்கள் எமது கரத்தைப் பலப்படுத்தவேண்டும் என்றும் கூறினார். (107)

## மொழிக்கொள்கையை அமுல்படுத்த

# தீவிர நடவடிக்கைகள்!

(கொழும்பு)

''அரசாங்கத்தின் புதிய மொழிக் கொள்கைக்கிணங்க சிங்களமொழியையும், தமிழ் மொழியையும் அரசகரும மொழிகளாகவும், ஆங்கிலத்தை இணைப்பு மொழியாகவும் அரசாங்கம் பிரகடனம் செய்கிறது. இதனை தீவிரமாக அமுல்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

அரசியல் யாப்பின் 16வது திருத்தத்தின்படி, உத்தியோக மொழிக்கொள்கைவிடயத்தில் அமைச்சரவைக்குசமர்ப்பிக்கப்பட்ட உத்தியோகபூர்வ அறிக்கையை தெளிவுபடுத்திய பாதுகாப்பு ராஜாங்க அமைச்சர் திரு. ரஞ்சன் இவ்வாறு தெரிவித்தார்.

அரசாங்கத்தின் புதிய மொழிக்கொள்கை பற்றி பொதுமக்கள் மத்தியிலும், கொள்கைவகுப்போர், நிர்வாகிகள் மத்தியிலும் பிரபல்யப்படுத்துவதில் எதிர்நோககும் சவால்களுக்கு ஈடுகொடுப்பது அவசியமாகும். இதற்கென அரசகருமமொழித்திணைக்களத்தைத் தரம் உயர்த்தவும், அதன் நடவடிக்கைகளை ஒருமுகப்படுத்தவும் அமைச்சரவைக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அரசாங்கத்தின் சகல படிவங்களும் மும்மொழிகளிலும் கிடைக்கக் தக்கதாக, மீள் அமைப்புச் செய்யவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சகல, அதிகாரிகளுக்கும், உதவி அரசாங்க அதிபர்களுக்கும், மாகாண, மாவட்ட மட்டத்தில் மொழி வகுப்புக்கள் நடாத்த ஒழுங்குகள் எடுக்கப்படும். இதற்கென எட்டு லட்சம்ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவையின் அங்கீகாரம் பெற்றுள்ள, அரசகரும மொழிஆணைக்குழுவை அமைக்கும் நகல் சட்டம் ஜூன் மாத நடுப்பகுதியில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவிருப்பதாகவும் அமைச்சர் ரஞ்சன் தெரிவித்தார். (அ)

## இம்மாதம் 5ம் திகதிக்குமுன்—

# தனியார் கல்வி நிலையங்கள் பதிவு செய்யப்படவேண்டும்

### --தவறுவோர் மீது நடவடிக்கை

(யாழ்ப்பாணம்)

தனியார் கல்வி நிறுவன ஒன்றியத்தில் இதுவரையும் பதிவு செய்யாத தனியார் கல்வி நிறுவனங்கள் இம்மாதம் 5-ம் திகதிக்கு முன்னர் கோண்டாவிலிலுள்ள விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி காரியாலயத்தில் பதிவு செய்யப்பட வேண்டும் என கேட்கப்பட்டுள்ளனர்.

சகல தனியார் கல்வி நிறுவனங்களும் பத்து மாணவர்களுக்கு மேற்பட்டவர்களை கொண்டு இயங்கும் பிரத்தியேக வகுப்புகளும் பதிவு செய்தல் வேண்டும்.

தினமும் காலை 10 மணி தொடங்கி 12 மணிவரையும் மாலை 2-30 தொடங்கி 4-30 வரையிலும் பதிவுகள் ஏற்றுக் கொள்ளப்படும். தவறுவோர் மீது ஒழுங்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

## மேஜர்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நடைபெறும் பாடசாலை விபரமும் வருமாறு: யாழ் கோட்டம் யாழ். மத்திய கல்லூரி, மருதனுமடம் கோட்டம்- இராமநாதன் கல்லூரி மருதனுமடம், பண்டத்தரிப்புக் கோட்டம்- யூனியன் கல்லூரி தெல்லிப்பழை, வடமராட்சிக் கோட்டம்- இந்து மகளிர் கல்லூரி பருத்தித்துறை, தீவுப் பகுதிக் கோட்டம்- சேர். வை. துரைச்சாமி மத்திய மகா வித்தியாலயம் வேலணை.

அனைவரையும் வருகை தந்து சிறப்பிக்குமாறு யாழ். மாவட்ட விடுதலைப் புலிகள் மாணவர் இயக்கம் அழைப்பு விடுத்துள்ளது.

## குழந்தைகளுக்கு

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

பேர் குழுவொன்று இவ்விஜயத்தை மேற்கொள்ளவுள்ளது.

இம்மாதம் 11-ம் திகதி இலங்கைக்கு வரவிருக்கும் குழு இரண்டு வாரங்கள் இங்கு தங்கியிருந்து கொழும்பு, மாத்தறை, யாழ்ப்பாணம் ஆகிய மூன்று வைத்திய சாலைகளிலும் இச்சத்திர சிகிச்சைப் பணியை மேற்கொள்ள விருக்கிறது.

யாழ்ப்பாணத்தில் தெரிந்தெடுக்கப்பட்ட சுமார் பத்து தொடக்கம் பதினைந்து குழந்தைகளுக்கு மாத்திரம் இச் சிகிச்சையை இந்தக் குழுவினர் அளிக்கவுள்ளனர் என்று யாழ். போதனாவைத்தியசாலையின் சத்திரசிகிச்சைப் பேராசிரியர் வ. கருணைநாதன் தெரிவித்தார்.

சிகிச்சை பெறவிருக்கும் குழந்தைகளின் பெற்றோர் இம்மாதம் 8-ம் திகதி யாழ். போதனா வைத்தியசாலை வெளிநோயாளர் பகுதி சிரேஷ்ட வைத்திய அதிகாரியுடன் தொடர்பு கொண்டு சிகிச்சைக்கான ஏற்பாடுகளை செய்து கொள்ளுமாறு, வைத்தியசாலைப் பணிப்பாளர் டாக்டர் செல்வி புஷ்பா சண்முகம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (56)

## யாழ் மாவட்டத்தின் புனரமைப்பு நிதி இன்று முதல் அரச அதிபர் ஊடாகவே வழங்கப்படும்

(யாழ்ப்பாணம்)

வடக்கு கிழக்கு மாகாண சபையினால் யாழ். மாவட்டத்தின் புனர்வாழ்வு புனரமைப்பு நடவடிக்கைகளுக்கு ஒதுக்கப்படும் நிதி இன்று 1-ம் திகதி தொடக்கம் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் ஊடாகவே வழங்கப்படவுள்ளது.

இதுவரை காலமும் யாழ். மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்களுக்குரிய நிதி அந்தந்த திணைக்களங்களுக்கு நேரடியாகவே வழங்கப்பட்டுவந்தன.

யாழ். மாவட்டத்திலுள்ள திணைக்களங்கள் ஒன்றிணைந்து செயற் திட்டங்களை மேற்கொள்ள வசதியாகவே இந்தப் புதிய நடவடிக்கை மேற்கொள்ளப்படவிருப்பதாக தெரியவருகிறது. (153)

## நாளை முதல் இணக்க மன்றுகள் இயங்கும்!

(நெல்லியடி)

கரவெட்டி உதவி அரசாங்க அதிபர் பிரிவுக்குட்பட்ட ஐந்து இணக்கமன்றுகள் நாளை முதல் செயற்படவுள்ளன. இதற்கான உறுப்பினர்களில் பொதுமக்களில் ஐந்துபேரும், விடுதலைப் புலிகளில் ஐந்து பேருமாக தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

பொதுமக்கள் தமது பிரச்சினைகளை இணக்கமன்றிற்கு ரூபா இருபத்தைந்து செலுத்தி பதிவுசெய்து தீர்த்துக்கொள்ளும்படி வேண்டப்பட்டுள்ளனர். (55)

## வடபகுதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

மேற்குப் பக்கமாக வடபகுதி கடற்பரப்பில் கேட்ட இப் பயங்கரச் சத்தம் காரணமாக கரையோரப் பகுதி மக்கள் பெரும் பீதியடைந்தனர்.

கடந்த 24-ம் திகதி முதல் வடக்கு கிழக்கு கடற்பகுதியில் கடற் படையினரை உஷார் நிலையில் இருக்குமாறும், அத்துமீறி மீன்பிடிக்கும் படகுகளையும், ஆயுதக் கடத்தலில் ஈடுபடும் படகுகளையும் கண்காணிக்குமாறும் தேவையேற்பட்டால் சட்ட விரோத நடவடிக்கைகளை தடுக்க சுடுமாறும் பாதுகாப்பு அமைச்சால் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளதாகவும் அறிய வருகிறது.

இதனையடுத்தே இவ்வாறு பீரங்கிக் குண்டுகள் வெடிக்க வைக்கப் பட்டிருக்கலாமெனக் கருதப்படுகிறது. (86)

## மாகாணசபை

(1ம் பக்கத் தொடர்ச்சி

திரு. ரஞ்சன் விஜேரத்ன வடக்கு-கிழக்கு மாகாணசபை கலைப்பு குறித்து செய்தியாளரின் கேள்விக்கு இவ்வாறு உறுதியாக பதிலளித்தார். (அ)

## மண்டேலாவுக்கு லெனின் விருது!

(மாஸ்கோ)

1990ம் ஆண்டிற்கான சர்வதேச லெனின் சமாதான பரிசு ஆபிரிக்க தேசியவாதத் தலைவர் டாக்டர் நெல்சன் மண்டேலாவிற்கு வழங்கப்பட்டுள்ளது.

கிரெம்ளினில் நடைபெற்ற சர்வதேச லெனின் சமாதான விருதுக்கான கமிட்டிக்கூட்டத்தில் இம்முடிவு அறிவிக்கப்பட்டது.

## வாகனப்பத்திரம் காலஎல்லை நீடிப்பு

(யாழ்ப்பாணம)

தமிழீழ விடுதலைப் புலிகளினால் வடக்குக் கிழக்குப் பிரதேசங்களில் நான்கு சக்கர வண்டிகளுக்கான உத்தரவுப் பத்திரம் வழங்கும் திகதி யூலை மாதம் முதலாம் திகதிவரை நீடிக்கப்பட்டுள்ளதென விடுதலைப்புலிகளின் மக்கள் முன்னணியின் கோண்டாவிலுள்ள யாழ் மாவட்ட மாதிரிச் செயலகம் தெரிவித்தது. (152)

## தென்மராட்சியில்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி கோட்டத்திற்கான மாணவர் புதிர்ப் போட்டி நாளை சனிக்கிழமை காலை சாவகச்சேரி றிபேர்க் கல்லூரியில் நடைபெறும்.

மேற்படி போட்டி 6ம் திகதி நடைபெறுமென்று நேற்றைய பத்திரிகையில் தவறுதலாக இடம்பெற்றுவிட்டது.

## ஹஜ்யாத்திரிகர்களுக்கு வசதிகள்

(கொழும்பு)

ஹஜ் யாத்திரையை இம்முறை மேற்கொள்ளும் யாத்திரிகர்களுக்கு பல்வேறு வசதிகள் ஜனாதிபதி திரு. ஆர். பிரேமதாசாவின் பணிப்புரையின் பேரில் மேற்கொள்ளப் படும்.

## விடுதலைப்புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

வடக்கு-கிழக்கு மாகாணத்தின் நிலைமை படிப்படியாக சீர்திருத்தவேண்டும். அங்கு மக்கள் மத்தியில் படிப்படியாகவே நம்பிக்கையை வளர்க்க வேண்டுமெனவும் அமைச்சர் ரஞ்சன் மேலும் தெரிவித்தார்.

## படகுச் சொந்தக்காரர்களின் தகைமைப் பத்திரங்கள் இன்று வேலணை உ. அ. அதிபர் அலுவலகத்தில் பரிசீலனை

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு நாகபூஷணி அம்பாள் ஆலய உற்சவத்தின் போது யாத்திரிகர்களைக் கொண்டு செல்லும் கடற் சேவையில் தமது படகுகளை ஈடுபடுத்த விரும்பும் மோட்டார் படகுகளின் உரிமையாளர்கள் இன்றுவெள்ளிக்கிழமை காலை 10 மணிக்கு வேலணை உதவி அரசாங்க அதிபர் பணிமனைக்கு வரும்படி கேட்கப்பட்டுள்ளார்கள்.

தமது படகுகளுக்கான பத்திரம் முறையாக படகுச்சட்டம் வர்த்தக கப்பல் சட்டத்தின் கீழ் பெறுவதற்குவசதிகள் செய்யும் வகையில் கடற்றொழில் திணைக்களத்தைச்சேர்ந்த கடலக பொறியியல் உதவியாளர் திரு எம்.மகாதேவாவை படகு உரிமையாளர்கள் வேலணைபணிமனையில் சந்திக்கவுள்ளனர்.

கப்பல் துறைமுகஅமைச்சின் கீழ் உள்ள பொறியியலாளரும் கப்பல்தகைமைக்கணிப்பாளருமான திரு. எச்.என். அல்மெய்டாவின் பணிப்புரையின் பேரில் திரு. எம். மகாதேவா இந்த நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளார்.

வேலணையில் இதற்கான ஆரம்பநடவடிக்கைகளை இவர் எடுக்கவிருக்கிறார்.

நயினாதீவு, அனலைதீவு, நெடுந்தீவு, ஊர்காவற்றுறை, மண்டைதீவு, மயிலிட்டி. குருநகர், வல்வெட்டித்துறை ஆகிய இடங்களிலுள்ள மோட்டார் படகுச் சொந்தக்காரர்களும், ஏனையஇடங்களிலுள்ள மோட்டார் படகுச் சொந்தக் காரர்களும் இத்திருவிழாக் காலங்களில் சேவையாற்ற விரும்பினால் இன்று காலை வேலணை உதவிஅரசாங்க அதிபர் பணிமனைக்கு வரும்படி கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (153)

## கடத்தல்

(1-ம்பக்கத்தொடர்ச்சி)

விசேட தடுப்பு பிரிவினரிடம் படகையும், கடத்தல்பொருட்களையும் சம்பந்தப்பட்ட ஐந்து பேரையும் கடற்படையினர் ஒப்படைத்தனர்.

சுங்கப்பகுதியினரின் விசாரணையின் பின்பு படகும் கடத்தல் பொருட்களும் பறிமுதல் செய்யப்பட்டன.

படகில் வந்த ஐந்து பேரில் மூவர் ஐயாயிரம் ரூபா பிணையில் விடப்பட்டனர். படகில் அகதிகளாக வந்ததாகக்கூறிய இருவரும் எச்சரிக்கை செய்யப்பட்டு விடுதலை செய்யப்பட்டார்கள். (53)

## புலிகள்-ஜனாதிபதி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பேச்சுவார்த்தை முடிந்த பின்பு விடுதலைப்புலிகள் முக்கியஸ்தர்களும், அரசாங்க தரப்பினரும் மட்டக்களப்புக்கு பயணமாகவிருக்கிறார்கள். இருபகுதியினரும் அங்குள்ள நிலைமைகளை நேரில் அவதானிப்பார்கள் எனத் தெரியவருகிறது.

விடுதலைப்புலிகளின் சார்பில் விடுதலைப் புலிகளின் மக்கள் முன்னணியின் தலைவர் திரு. மகேந்திரராசா (மாத்தயா) செயலாளர் யோகரட்ணம் யோகி, அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம், திருமதி அடேல் பாலசிங்கம், செல்வி ஜெயா ஆகியோர் கலந்துகொள்வார்கள்.

## வடக்கு கிழக்கு

(1ம் பககத் தொடர்ச்சி)

முடியும்.

அரசாங்கத்திடம் எம்மால் சமர்ப்பிக்கப்பட்டிருக்கும் பெயர் பட்டியலிலிருந்து மாகாண பொலிஸ் அமைக்கப்பட வேண்டும், இதன் பின்னர் தான் வடக்கு கிழக்கு மாகாணங்களில் புதிதாக பொலிஸ்நிலையங்களைச் செயற்பட வைக்கமுடியும்.

முதலில் அரசியல் அமைப்பில் 6-வது ஷரத்து நீக்கப் படவேண்டும், அதன்பின்பு விடுதலைப் புலிகள் ஜனநாயக நீரோட்டத்தில் பங்குபற்ற முடியும் என்றும் அவர் கூறினார். (152)

## சொக்கன்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

தி. கமலநாதன் தலைமையில் நடைபெறுகிறது.

வைத்திய கலாநிதி இராமநாதன் அரங்கில் சொக்கன் ஆக்கங்களின் கண்காட்சி காலை 9 மணிதொடக்கம் 12 மணிவரை நடைபெறும்.

விழாநாயகன், அவரது இல்லத்திலிருந்து விழா மண்டபத்திற்கு அழைத்து வரப்பட்டு சைவப் பெரியார் சு. பரநிருபசிங்கம் அரங்கில், விழாநாயகருக்கும் துணைவியாருக்கும் மாலை அணிவிக்கப்படும். மணிவிழாச்சபை இணை செயலாளர் திரு க. சிவராசா வரவேற்புரை நிகழ்த்துவார்.

வாழ்த்துரைகளைத் தொடர்ந்து சொக்கன் பொன்னாடை போர்த்து கௌரவிக்கப்படுவார்.

மாலை நிகழ்ச்சியாக மணிவிழா மலர் வெளியீடும் ஆய்வுரையும் அதனைத் தொடர்ந்து சொக்கனின் 'மாருதப் பிரவல்லி' நாடக நூல் வெளியீடும் ஆய்வுரையும் விழா நாயகனின் பதிலுரையும், கலைநிகழ்ச்சிகளும் இடம் பெறும்.

## இந்திய

(1ம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கைப் பிரஜாவுரிமை இல்லாதஎவரும் இலங்கையின் எந்தப் பிரதேசத்திலும் நிரந்தரமாகக் குடியேறுவதறகு உரிமையில்லை, சகலரும் இந்த நாட்டின் சட்டத்தை அனுசரித்து நடக்கவேண்டுமென்று அமைச்சர் ரஞ்சன் மேலும் குறிப்பிட்டார். (அ)

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1990-ம் ஆண்டு ஆனி மாதம் 1-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/100306/81.